காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

3-4-66

கேள்வி--பதில்!

(1) தேர்தலுக்கு முன்னர் அமைச்சர்கள் ராஜினாமா செய்து விடவேண்டும் என்கிறீர்களே, தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் அப்படிச் செய்யுமா?

சரியான சமயத்தில், நல்ல கேள்வி கேட்டீர். சென்னை மாநகராட்சியில், எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரசை, வரப் போகும் தேர்தலுக்குப் பின்னர், சென்னை சட்ட மன்றத்திலும் எதிர்க் கட்சியாகவே சந்திக்கப் போகும் கழகம், அண்மையில் மாநகராட்சியில், எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்த போது, ஜனநாயகத்தைக் காப்பாற்றி, நல்ல புதியதொரு மரபை ஏற்படுத்திக் காட்டியது போல, எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், ஜனநாயக மரபைக் காப்பாற்றும்!

(2) வங்காளத்தில் நடைபெற்ற வன்முறைகளையும், கொள்ளை, கொலை, தீயிடல் முதலியவைகளையும் கம்யூனிஸ்டுகளா நடத்தினார்கள்?

இல்லை, இல்லை. இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தான் நடத்தினார்கள் என்று வலதுசாரி இதழ் ஒன்று கட்டுரையொன்றில் சொல்லி இருக்கிறது.

(3) உணவுப் போராட்டத்துக்கு வன்முறை தேவைதானா?

பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. ஆனாலும் 'சோறு கொடு' என்று கேட்பவர்களின் முன்னால், துப்பாக்கியைக் காட்டும்போதுதான் முறை, மாறிப்போகிறது. என்றாலும் இந்த வன்முறைகள் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவையே.

(4) ராணுவ ஆட்சி வரும் என்று காமராசர் எந்தக்கருத்தில் பேசினார் என்று தெளிவாகச் சொல்கிறீர்களா?

காமராசரேதெளிவாகத்தானே சொல்லி இருக்கிறார். தற்போதைய இந்திய அரசியலின் நிலை, பெரும் கொந்தளிப்பில் இருக்கிறது; கடந்த காலத்தில் காங்கிரஸ் தன் ஆட்சிச் சாதனைகளால், நாட்டு மக்கள் எந்த அளவு வாழ்வில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பதை 'அகில இந்தியா'வின் அந்தரங்க மனம் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும்; அதனால் அலறிப் பதறி, ஐயோ! ஆபத்து!! என்று உதடுகள் துடிக்க, அனைத்திந்தியாவிலும் காங்கிரஸ் தன் சரிவைச் சரிக்கட்ட வழி என்ன வைத்திருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் காமராசர். இதை வேறுவிதமாகச் சொல்வதென்றால், 'காங்கிரசைப் பதவி நாற்காலியில் அமர்த்தா விட்டால், கேரளாவில் கம்யூனிஸ்டுகளுக்குச் செய்ததுபோல, குழப்பங்கள், அமளிகள், ரகளைகள் செய்து, தொல்லை கொடுத்து ராணுவ ஆட்சிக்கு வழி வகுத்து விடுவோம் ஜாக்கிரதை!' என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

(5) காங்கிரஸ்காரர்களுக்கு நீங்கள் ஏதாவது நல்ல புத்திமதி சொல்லக் கூடாதா?

காந்தியாரே சொல்லிப்பார்த்து விட்டு மறைந்துவிட்டார், காங்கிரசைக் கலைத்துவிடுங்கள் என்று. காங்கிரசைக் காப்பாற்ற கோடி கோடியாக நிதி திரட்டுபவர்களிடம்போய் எதைச்சொல்வது. காந்தியாரை மதிக்காதவர்களாயிற்றே இந்த காந்தியவாதிகள்!

(6) எப்படிப்பட்ட எதிர்க்கட்சி வேண்டும் என்று காமராசர் விரும்புகிறார்?

தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்காமல் குற்றம் செய்பவர்களைக் கூண்டேற்றாமல்—செய்கின்ற ஊழல்களையெல்லாம் பொதுமக்கள் கவனத்துக்குக் கொண்டுவராமல் — அடிககின்ற கொள்ளைகளை அம்பலப்படுத்தாமல்—அவர்களது அரசுக் கட்டிலுக்கு ஆட்டம் தராமல்—ஐயனே! எமை ஆதரிக்கும் மெய்யனே! என்று தண்டனிட்டுத் தொழுது நிற்கும் ஒரு கட்சியை விரும்புகிறாரோ என்னவோ!

(7) கழகத்தை, காங்கிரஸ் காரர்கள் மட்டுமல்லாது அமைச்சர்கள் கூட கண்டபடி தாக்கிப் பேசுகிறார்களே,கவனித்தீர்களா?

குடிக்கக் கொடுத்த கூழை கொள்ளை கொடுததுவிட்ட நிலை காங்கிரசுக்கு. 1967-க்குப் பின்னர் தங்கள் நிலையை நினைத்துப் பார்த்துப் பொருமுகிறார்கள். பகல் பனிரெண்டு மணிக்குக் கணவன் காலமாகிவிடுவான் என்பது நிச்சயமாகிவிட்ட பின்பு, பறிகொடுக்கப்போகும் மனைவி, மாரடித்து அழத்தானே செய்வாள்!

(8) வீட்டுக்கு வீடு சென்று, காங்கிரஸ் தேர்தல் நிதி திரட்டப் போகிறதாமே?

அப்படியாவது அவர்கள் கீழே இறங்கிவந்து பொது மக்களைச் சந்திக்கட்டுமய்யா! வீட்டுக்கு வீடு ஏறிஇறங்கட்டும். அங்குள்ள மக்களைச் சந்திக்கட்டும். அவர்கள் கேட்கப்போகும் வினாக்களுக்குப் பதில் சொல்லட்டும். அதன்பிறகாவது இந்த நாட்டை ஆளும் தகுதி, திறமை தமக்கு இல்லை என்பதைப் புரிந்துகொள்ளட்டும்!

(9) காஷ்மீர் முன்னாள் பிரதமர் பக்ஷிகுலாம் மீதான லஞ்ச ஊழல் வழக்கு என்ன ஆயிற்று?

வழக்கம்போல,1965-ல் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் ஊழியர்களுக்கு அந்த ஓராண்டில் மட்டும் 91,000 ரூபாய் ஊதியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது; அது மட்டுமல்லாமல், விசாரணைக் கமிஷன், முன்பாக ஆஜராகும் பிராசிகூஷன் தரப்பு வககீல்களுக்காக ரூ. 1,85,000 பீஸ் கொடுத்திருக்கிறார்கள். இதைவிட இன்னும் என்ன வேண்டும்?

விற்பனையாளர் தேவை

எமது "காஞ்சி" வார இதழை விற்பனை செய்ய கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை.

நாச்சியார்கோவில்
பாலக்காடு
கோத்தகிரி
திருத்தணி
திருநின்றவூர்
ஆதண்டார் கோவிலை
வேதாரண்யம்.

விவரங்களுக்கு:

உரிமையாளர், "காஞ்சி",
சின்ன காஞ்சிபுரம்.

காஞ்சி

மலர் 2 3—4—66 இதழ் 36

திருநாள் பெற்றோம்!

'திருவள்ளுவர் நாள்' விடுமுறை விட மாநில அரசு மனமுவந்து ஒப்புக்கொண்டுள்ளது; மகிழ்ச்சிக்கு உரிய செய்தி. தமிழ்ப் புலவர் பெருமக்களுள் 'வான் புகழ்' கொண்டவன் வள்ளுவன்; வாழ்க்கை விளக்கம் செய்த பெருமகன். என்றும் நின்று நிலைக்கும் பேராற்றல் பெற்றது அவருடைய பெருநூல்—திருக்குறள். எவ் வழிச் செல்வோரையும் தன்வழி ஈர்த்து ஒன்றுபடுத்தும் இயல்புடையது அந்நூல். உலகப் பொதுமறை என்று அதனைக் கூறினால் அது மிகைமொழி யாகாது.

இத்தகு பெருமையும் பீடும் உடைய பெரும்புலவர் பெயரால் ஒரு நாள் விடுமுறையாக அமையவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் நெடுங்காலமாக வற்புறுத்தி வந்துள்ளது. தெருவெல்லாம் தமிழ் முழங்கி, தமிழ்நெறி உணர்ந்து உணர்த்துவதற்கு, வள்ளுவன்கூறியாங்கு வாழ்ந்து சிறப்பதற்கு வழிகோலவும் தமிழகத்தின் பெருவிழாவாக உள்ள பொங்கல் போல், திருவள்ளுவர் நாளும் திருவிழாவாக அமைந்து, தமிழ் மக்களுக்குப் புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் தரவும் அவ்விடுமுறை நாள் பயன்படும். அதனால் முன்னேற்றக் கழகம் அதனை வற்புறுத்தி வந்தது.

சேயாறு (செய்யார்) சட்ட மன்ற உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சட்டமன்றத்தில் இந் நோக்கத்தோடு 'திருவள்ளுவர் நாள்' என ஒரு நாள் விடுமுறை அளிக்கவேண்டும் என்ற தீர்மானமும் கொண்டுவந்தார்.

ஆனால் முதலமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் அப்போது அதனை ஏற்க மறுத்துவிட்டார். 'பிறர் சொல்லிக் கேட்பது பெருமைக்கு உரியது அல்ல' என்று எண்ணினாரோ என்னவோ!

எப்படியோ திருவள்ளுவர் நாள் விடுமுறை கிடைத்திருக்கிறது! மகிழ்வோம்!

திருவள்ளுவர் நூலும், கருத்துக்களும் தமிழ் மக்களின் வாழ்வில் முக்கிய இடம் பெறல் வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தினால், திராவிட முன்னேற்றக் கழகம் அரிய பணிகள் பலவற்றைச் செய்துள்ளது. பொதுமக்களிடையே மிகுந்த அளவுக்குத் திருக்குறள் பற்று ஏற்படக் கழகமும் காரணம் என்பதை எவரும் மறுக்க இயலாது.

திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் பெருமுயற்சியாலேயே சட்டமன்றத்தில் திருவள்ளுவர் திருஉருவம் இடம்பெற்றது. மேலவையிலும் அவர் உருவப்படம் இடம்பெறல் வேண்டும் என்று பேராசிரியர் அன்பழகன் கேட்டுக்கொண்டுள்ளார். செலவை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்! விரைவில் அங்கும் வள்ளுவர் படம் திறக்கக்கூடும்.

சில காலகத்திற்கு முன், திருவள்ளுவர் படம் பொறித்த அஞ்சல் தலை வெளிவரவேண்டும் என்ற முழக்கம் தமிழகத்தில் எங்கும் கேட்டது. அன்றும் திராவிட முன்னேற்றக் கழகம் வாளாயிருந்துவிடவில்லை. தேனாம்பேட்டைக் காங்கிரஸ் வெளியில் நடைபெற்றஒருகூட்டம் குறிப்பிடத்தக்கதுஆகும். அதுகாலை மாநில அமைச்சராகவிருந்த கனம் சுப்பிரமணியமும், நமது ஆசிரியரும் கலந்துகொண்ட ஒரு பாராட்டுக் கூட்டமே அது. திருவள்ளுவருடைய ஓவியம் தீட்டிய கலைஞரைப் பாராட்டுவதற்குக் கூடிய அக்கூட்டத்தில் — அது எங்கு நடக்கின்றது, எவர் வருகின்றனர் — என்ற சங்கதிகளைப்பற்றிப் பொருட்படுத்தாமல் — நமது ஆசிரியர் கலந்துகொண்டு, அவ்வுருவம் அஞ்சல் தலையில் இடம்பெறல் வேண்டும் என்று வற்புறுத்தியது, கழகம் வள்ளுவரிடம் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கும், வள்ளுவர் வழி தமிழர் நிற்கவேண்டும், அதனால் தமிழர் உயரவேண்டும் என்று கழகம் கருதுவதற்கும் தக்க சான்றாக அமையும்.

திருவள்ளுவரைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் மட்டும் ஏன் இத்தனை ஆர்வமும் அக்கறையும்? வேறு எத்தனையோ புலவர்களும் நூல்களும் இல்லையோ? ஆம்! உள்ளன. ஆனால் அவர்கள் அத்தனைப் பேரிலும் வள்ளுவர் வேறுபட்டு நிற்கின்றார். மற்ற புலவர்களிடமிருந்து பெறுவதைவிட மிகுதியாக பயனை, எளிதிலே வள்ளுவரிடம் பெறலாம். ஈரடியில், எண்ணங்களை அடக்கிக் காட்டியவர்; எளிமையான சொற்களில் அருமையான கருத்துக்களைத் திணித்துக் கூறியவர். எண்ணுபவர் எண்ணத்தின் வலிமைக்கு ஏற்ப அவருடைய குறள் ஆழ்ந்தும் அகன்றும் பொருள் தரும் பெற்றிமை வாய்ந்தது. வள்ளுவன் 'உலகினுக்கே'தான் வள்ளுவத்தினை ஈந்தான். ஆனால் அவன் பிறந்த மண்ணிலே வாழும் நாம் மட்டுமாவது அதனை நமதாக்கிக்கொள்ளவேண்டும்.

உணரப்படவேண்டிய அளவுக்கு, பின்பற்றப்பட வேண்டிய அளவுக்கு, இன்று வள்ளுவம் உணரப்படவில்லை; பின்பற்றப்படவில்லை.

விடுமுறை, விழா இவை வீணாகிவிடுவதில் பயனில்லை. திருவள்ளுவர் நாளில் ஒவ்வோரிடத்திலும் திருக்குறள் முழங்கவேண்டும். அன்று ஒருநாள் எவர் பேச்சும் குறள் கருத்துக்களைத் தழுவியே அமைய வேண்டும். ஆண்டுதோறும், அரசினர் வள்ளுவரின் பெருமைக்குரிய வகையில் ஒரு விழா எடுத்துப் புலவர் பெருமக்களை அந்நாளில் சிறப்புச் செய்யவேண்டும். அது வள்ளுவர் பெயரால் அமையும் விழுமிய நாள் ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்றும்போல் தன்னளவில் வள்ளுவரின் வாரிசாக விளங்கிவரும்.

(4-ம் பக்கம்பார்க்க)

சர்வதேசச் சட்டமும் பயனும்

சரித்திரம், கலாசாரம், பழக்க வழக்கங்கள், தேவைகள் ஆகியனவற்றில் வேறுபட்டு நிற்கும் பல்வேறு கிழக்கு மேற்கு திசை நாடுகளிடையே உள்ள வேற்றுமைகளைக் குறைத்து அனைவரும் 'மனித இனம்' என்ற அடிப்படையால் ஒன்றுபட்டவர்கள் என்பதை உணரச் செய்ய சர்வதேசச் சட்டங்கள் பயன்பட வேண்டும்.

—'எர்ல் வாரன்' கட்டுரையில்.

வசந்தம்

வசந்தத்தின் வசீகரம்! என்று கூறுகிறார் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி—அமெரிக்கத் தலைவருடன் தாம் நடத்திய கலந்துரையாடலில் கண்ட பலன் குறித்து.

எழில் மலர் பூத்துக் குலுங்கட்டும்! என்றென்றும் இருநாடுகளுக்கும் நேசத் தொடர்பு பசுமையாக இருக்கட்டும்! என்று கூறுகிறார் அம்மையார்; கவிதை நடையில்.

கனிவுடன் வரவேற்றார் அமெரிக்கத் தலைவர் என்றும்,

மக்கள் தமது இதயத்தையே காணிக்கையாக்கினார் என்றும்,

கேட்டது கிடைக்கிறது, மேலும் கேட்டிடினும் கிடைத்திடும் என்றும்,

பயணம் வெற்றி அளித்தது, பலன் மிகப் பெரிய அளவில் என்றும்,

இதழ்கள் பாராட்டுதலைப் பொழிந்துள்ளன.

நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை, நிர்ப்பந்தத்தைப் புகுத்தவில்லை, நிலைமையை உணருகிறேன், நேசக் கரம் நீட்டுகிறேன்—என்று தெரிவித்திருக்கிறார், ஜான்சன்.

வெற்றி! வெற்றி! மகத்தான வெற்றி! இந்திரா காந்தியின் புகழ் எட்டுத் திக்கும் பரவுகிறது!!—என்று ஏடுகள் சிந்து பாடும்.

ஆனால், இந்தச் சொல்லலங்காரத்துக்கு இடையில் பிணைந்து கிடக்கும் ஓர் பேருண்மையை நாம் மறந்து விடுவதற்கில்லை.

அமெரிக்கத் துணை மிகப் பெரிய அளவிலும்; தொடர்ந்தும் கிடைத்தாலொழிய, இங்கு மேற்கொள்ளப்பட்டு விட்டுள்ள தொழில் துறை முயற்சிகள் இடையிலேயே முடங்கிப் போய், பெரிய பொருளாதாரச் சீர்கேடு ஏற்பட்டுவிடும்.

இந்த உண்மையை அமெரிக்காவின் ஆட்சியாளர்கள் அறியாமலில்லை; இங்கு அது உணரப்பட்டுள்ளதைக் காட்டிலும் தெளிவாக அமெரிக்காவில் இந்த நிலை உணரப்பட்டு விட்டிருக்கிறது.

அமெரிக்கா தரத்தக்க அளவு பொருளுதவி வேறெந்த நாட்டினாலும் தந்திட முடியாது என்பதனையும் அந்நாடு உணர்ந்திருக்கிறது.

ஆகவே நிபந்தனைபோடவோ நிர்ப்பந்தம் ஏற்படுத்தவோ தனியான முயற்சியில் அந்நாடு ஈடுபடவேண்டிய அவசியம் எழாது; இந்தியாவே, குறிப்பறிந்து நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறது அமெரிக்கா.

அமெரிக்க உதவி கொண்டுதானா உணவுப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்; மானத்தோடு வாழ்வோம், செத்தாலும் பரவாயில்லை வெளிநாட்டிடம் உணவுக்காகக் கையேந்தும் கேவலம் ஏற்படக்கூடாது என்று இசைத்தட்டிலேயே உறுதியையும் தேசியத் தன்மானத்தையும் பதிததளித்துவிட்டார் காமராஜர். இசைத்தட்டு இங்கு மானத்தோடு வாழ்வோம் என்று ஒலியைத் தந்துகொண்டிருக்கிறது; அதே போது இந்திரா அம்மையார் வாழ வழிகாண அமெரிக்காவை நாடி, நாட்டின் நிலைமையை, நெருக்கடியை விளக்கி, அமெரிக்கக் குடி அரசுத் தலைவரின் கனிவான உதவியைப் பெறுகிறார். வசந்தம் கண்டேன் என்று கூறிக் குதூகலிக்கிறார்.

காமராஜரின், 'மானத்தோடு வாழ்வோம்' என்ற முடுக்குப் பேச்சு எத்தனைப் பொருளற்றது என்பதனை இந்திரா காந்தியாரின் அமெரிக்கப் பயணம் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டிருக்கிறது.

காமராஜர் கடுங்கோபமாக இருக்கிறாராமே, வெளிநாட்டிடம் கை ஏந்தக்கூடாது, அது கேவலம் என்று பேசுகிறாராமே......என்று கேட்டிருப்பார்கள். அம்மையார் விளக்கம் அதிகம் அளித்திருக்க மாட்டார்கள்; இலேசான புன்னகையைத் தருவித்துக்கொண்டபடி, "எங்கள் தலைவர் அப்படித்தான்! எதையாவது பேசுவார்! ஆனால் நல்லவர்! சொன்னால் 'சரி' என்பார்!" என்று பதில் கூறி இருக்கக்கூடும்.

இந்தியாவுக்கு நாம் உடனடியாக ஏராளமான அளவு உணவுப்பொருள் அனுப்பிக் கொடுக்காவிட்டால், அங்குப் பட்டினிக் கொடுமையால், வியட்நாம் நாட்டிலே போரின் காரணமாக எவ்வளவுபேர் செத்தார்களோ அவ்வளவு அளவினர் இறந்துபடுவர்

என்று, இந்திரா அம்மையாருடன் பேசிய பிறகு, நிலைமையை விளங்கிக்கொண்டு அமெரிக்கக் குடி அரசுத் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

பேச்சு எந்தவிதமாக இருந்திருந்தால், அமெரிக்கத் தலைவர் இந்தியாவில் பயங்கரமான அளவு பட்டினிச் சாவு ஏற்படக்கூடிய நெருக்கடி மிகுந்திருக்கிறது என்று வெளிப்படையாகப் பேசியிருப்பார்!

வளையமாட்டோம்! நெளியமாட்டோம்! குழைய மாட்டோம்! கும்பிடு போடமாட்டோம்! — இவ்விதம் பேசலாம் இங்கு! நிரம்ப!! துணிந்து.

ஆனால் அங்கு சென்று அம்மையார் காமராஜர் பாணியில் பேசியிருந்திருந்தால், கப்பல் கிளம்புமா?

ஒருவிதத்தில் பார்க்கும்போது காமராஜரின் பேச்சால் மூண்டுவிட்ட மனப்போக்கை அம்மையாரின் பேச்சு மாற்றிட உதவி இருக்கிறது என்று கூறலாம்.

உதவி கிடைக்கிறது! கேட்கும் போதெல்லாம் கிடைக்கிறது! சிலர் விவரமறியாததால் முடுக்காகப் பேசிவிடுவது பற்றிக் கூட கவலைகொள்ளாமல் உதவி அளிக்கிறார்கள். ஆனால், இந்த உதவியைக் கொண்டு, நம் நிலைமையைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும்; என்றென்றும் பிறர் கரத்தை எதிர்பார்த்துக் கிடக்கும் இழி நிலை நீடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு வழி இங்கேதான இருக்கிறது; வாஷிங்டன் நகரில் அல்ல! இந்நாட்டு மக்களின் முழு ஒத்துழைப்பு, மனத் திருப்தியுடன கூடிய ஒத்துழைப்பு தேவை. அதனைப் பெறத்தக்க விதத்தில் ஆட்சியின் போக்கு திருத்தி அமைக்கப்பட வேண்டும். என்றென்றும் அமெரிக்காவை நமக்காக அன்னதான சமாஜம் நடத்திக் கொண்டிருக்கச் சொல்லிக் கேட்க முடியுமா! கேட்கலாகுமா! கேட்பது கேவலமல்லவா!

(13-ம் பக்கம் பார்க்க)

தம்பி

வெள்ளை மாளிகையில்! (8)

அடக்கப்பட முடியாத ஆத்திரம், அதிலும் நீதியற்ற காரணத்துக்காக மூட்டிக் கொள்ளப்பட்டுவிடும் ஆத்திரம், வெறியாகிவிடுகிறது; அந்த வெறியிலே சிக்கிக்கொள்பவர்கள் எந்தக் கொடுமை செய்திடவும், இழிசெயல் புரிந்திடவும் கூசுவதில்லை. வெறிகளில் மிக மோசமானது, தன் இனம், தன் மதம் உலகிலேயே உயர்வானது, தூய்மையானது என்ற அழுத்தமான நம்பிக்கையின் காரணமாக விளைந்திடும் வெறி—தன இனத் தூய்மை காப்பாற்றப்பட்டாக வேண்டும என்பதற்காக அந்தத் தூய்மையைக் கெடுக்க முனைபவர்களை அல்லது அந்தத் தூய்மையை ஒப்புக்கொள்ள மறுப்பவர்களைத் தீர்த்துக் கட்டிவிடவும் துணிந்துவிடச் செய்கிறது.

அப்படிப்பட்ட கொலைபாதகத்துக்குப் பலியானவர்களே, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர்களான ஆபிரகாம்லின்கனும், கென்னடியுமாவர்.

இங்கேயும் உலக உத்தமர் என்று கொண்டாடப்பட்ட காந்தியாரின் உயிரைக் குடித்ததும் ஒருவிதமான வெறி உணர்ச்சியேயாகும்.

எதிர்பாராத வகையில் குடிஅரசுத் தலைவராகிவிட்ட டக்ளஸ் டில்மனையும் கொன்று போட வெள்ளை வெறியர் திட்டமிட்டதிலே வியப்பேதும் இல்லை. ஆனால் டிலமன் தப்பித்துக்கொள்கிறார். அவரைக் கொலை செய்துவிடத் தீட்டப்பட்ட சதி தோற்றுவிட்டதாலே தான், அவர்மீது கொடுமையான பழிசுமத்தி வழக்குத் தொடுத்தனர்.

கொலை செய்து போடுவதைக் காட்டிலும் மோசமான செயல் ஒருவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி, இழிவான பழிசுமத்திக் கேவலப்படுத்திவிடுவது.

டக்ளஸ் டில்மனை, வெள்ளை மாளிகைத் தோட்டத்திலேயே அவர் உலவும்போதே மறைந்திருந்து தாக்கித் தீர்த்துக்கட்டிவிடுவது என்று தீர்மானித்த சதிகாரர்கள், அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கிட முனைந்தனர்.

குடிஅரசுத் தலைவருக்குத் தக்க பாதுகாப்பளிக்க, திறமைமிக்க காவலர் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களில் மிகுந்த கடமை உணர்ச்சியும், துணிவும்கொண்ட வெள்ளை இனத்தவன் ஒருவன் இருந்தான். அவன் மனதிலேயும் ஒரு குமுறல் மூண்டு கிடந்தது; இனவெறி காரணமாக அல்ல; தனக்கு உரிய இடம், மேலிடம் தரப்படாமல், அந்த மேலிடம் ஒரு நீகரோவுக்குத் தரப்பட்டுவிட்டது என்பதாலே மூண்டிட்ட குமுறல். ஆனால் அவனைக் கைக்குள் போட்டுக்கொண்டு காரியத்தை முடித்திட சதிகாரர்கள் முனையவில்லை. ஒருவேளை, மனதில் குமுறல் இருப்பினும், இத்தகைய இழிச் செயலுக்கு அவன் உடந்தையாகிடமாட்டான் என்று எண்ணிடத்தக்க விதமாக அவன் போக்கு இருந்திருக்கும்போல இருக்கிறது. சதிச் செயலுக்கு அவன் உடந்தையாக இருக்க மாட்டான் என்பதை மட்டுமல்ல, அவன் டில்மனைக் காத்து நிற்கிறவரையில் தமது கொலை பாதகத் திட்டம் நிறைவேறாது என்ற எண்ணமும் தோன்றிவிட்டது சதிகாரர்களுக்கு.



ஆகவே முதலில் அவனை மடக்கத் தீர்மானித்தனர். அதற்கு ஒரு மைவிழியாள் கிடைத்தாள்!

அவள் அழகி; கருநிறக் கவர்ச்சியும்
இளமை மெருகும், இனிய இயல்பும் கொண்
டவள்; நீக்ரோ.

நிறவெறி தலைவிரித்தாடிடும் நிலையிலும் இனத்தூய்மை காப்பாற்றப்படுவதற்காக எத்தகைய கொடுமையையும் இழி செயலையும் செய்திடத் துணிவுகொண்ட நிலையிலும், காமம்—அல்லது காதல் எனும் உணர்ச்சி, இனபேதம், நிறபேதம் என்பவைகளைக் கடந்த ஒரு கவர்ச்சியாக அல்லவா இருக்கிறது. அந்தக் கவர்ச்சியையே, விழிப்புடன் இருந்து வந்த அந்த வெள்ளைக் காவலாளியை வீழ்த்தப் பயன்படுத்தினர். இது ஒரு 'ஏற்பாடு' என்பதனை அவன் உணரவில்லை; மைவிழியாள் உள்ளபடி தன்னிடம் மயங்கிவிட்டாள் என்று எண்ணிககொண்டான்; அவன் அவளிடம் மயங்கி விட்டதன் விளைவு அந்த எண்ணம்.

ஒரு சிற்றுண்டி விடுதியில் ஏற்பட்ட சந்திப்பு, புன்னகையாகி, பொருளற்ற பேசசாகி, பொழுது போக்காகி, பிறகு ஆசைதான் ஆனுல் அச்சமாக இருக்கிறதே என்ற சாகசப் பேச்சாகி, பிறகு இது வரையில் நான் என்னை எவரிடமும் ஒப்படைத்ததில்லை, உம்மிடமோ நான் என்னை முழுவதும் ஒப்படைத்து விடத் துணிந்துவிட்டேன் என்ற காதற்பேச்சாகி, கடைசியில தனி அறைக்கே கொண்டு சென்று விட்டது.

அன்றையத் தினமும் அவன் குடிஅரசுத் தலைவரின் அருகிருந்து காவல் செய்யவேண்டிய முறை இருந்தது. ஆனுல் இந்த விருந்து முடிந்ததும் வேலையைக் கவனிககலாம என்று இருந்துவிட்டான். தன்னைக் கடமையைச் செய்யவிடாமல் தடுத்திடவே இந்தக் கள்ளி அமர்த்தப்பட்டிருக்கிருள் என்பதை அவன் உணரவில்லை. கள்ளி என்று எணணிக்கொண்டான், கற்கண்டு, பாகு, தேன், எனறு அல்லவா எண்ணிக்கொண்டான். ஆடவன்! இளைஞன்! மயக்கம்! தனனையும் அறியாமல் ஒரு பயங்கர சதியிலே பங்கெடுத்துக்கொள்கிரேம் என்ற எண்ணமே எழவில்லை. அவன்தான் பாவம் அவளுடைய விழியின ஒளியையும அது விடுத்திடும் அழைபபையும் கண்டு மெய்ம்மறந்திருக்கிருனே. மதுவும்கூட அருந்திவிட்டான்! நிலைமையை மேலுமா விளக்கவேண்டும்.

இசைத்தட்டு ஒலி எழுப்புகிறது; அவள் இதழ் அழைக்கிறது; அவன தனனை மறந்திருந்தான்.

நீக்ரோ இனத்தவள் தன் இனத்தானைக் கொன்று போடச் செய்யப்படும் சதியிலே எப்படி ஈடுபட முடிந்தது என்று வியப்பு ஏற்படும். தம்பி! வெறுப்பும் ஆததிரமும், தெளிவான அறிவின்மீது கட்டப்படுவதில்லையலலவா! டகளஸ் டில்மன்மீது வெள்ளையரில் வெறியருக்கு, நிறபேதம் காரணமாகப் பகை கிளம்பியது போலவே, நீக்ரோ இனத்தவருக்கு, டில்மன் தன இனத்தை மறநதவன், கைவிட்டு வ்டடவன, காட்டிக் கொடுப்பவன் என்ற ஒரு தவருன எண்ணம் காரணமாக வெறுப்பும் ஆத்திரமும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. வெள்ளை மாளிகையில் கொலுவிருக்கிருன், இவன் இனபபற்று உள்ளவனுனுல், ஒரே வரியில், நமது இனத்தின் இழிவைத் துடைத்திட முடியாதா—செய்தானு?

குடிஅரசுத் தலைவர் பதவியைக் காப்பாற்றிக் கொணடால் போதும், இனம் எக்கேடு கெட்டால் என்ன என்று எண்ணிவிட்டான்; சுயநலக்காரன்.

இனத்துக்காகப் பரிந்து பேசினுல், வெள்ளைப் பேரதிகாரிகள் தன்னைக் கவிழ்த்து விடுவார்களோ என்ற பயம்! கோழை!

இவன்தான் இப்படி என்ருல் நமது இன விடுதலைக் காகப் பாடுபட்டுக் கொண்டு வந்ததே, ஒரு இயக்கம், அதனையாவது விட்டு வைத்தானு? தடைச் சட்டம் போட்டுவிட்டான்! இனத்தைக் காட்டிக் கொடுத்து விட்டான்.

அது மட்டுமா! வெள்ளையர்களே ஏதோ பச்சா தாபப்பட்டுக்கொண்டு, நீக்ரோ மக்களுடைய வறுமையைப் போகக பெரிய தொகையைச் செலவிட ஒரு சட்டம் கொண்டுவந்தார்களா; இந்த இனத்துரோகி அந்தச் சட்டத்தையுமல்லவா, தூக்கி எறிந்துவிட்டான். இவனுக்கு வெள்ளை மாளிகையில் வாசம்! இவன் இனம் நாம்! நமக்குச் சாக்காட்டு ஓட்டு!. இவனை நாம் நமது இனத்தின் ரட்சகன் என்று கூறிக் கொண்டாடினோம, புத்தி கெட்டு! இவன் நமது இனத்தின் இழுக்கு அவ்வளவும் ஒன்று திரண்டு வந்துள்ள உருவம்! நீக்ரோ இனத்தை நாசமாக்க வந்துள்ள, கேடு!—தம்பி! இவ்விதமான எண்ணம், நீக்ரோககளில் மிகப் பலருக்கு. அவர்களின் தயாரிப்பு இந்தக் கவர்ச்சிமிக்க கருநிறக் காரிகை!

கட்டிலின்மீது சாய்ந்து கிடக்கிருள்; காமவெறியால் அவன் ஆட்டிவைக்கப்படுகிருன்; மிருக உணாச்சியை மது கிளறிவிடுகிறது. காரியம் கச்சிதமாக முடிவடைகிறது என்ற களிப்புடன் அவள் பேசுகிருள்.

நான் உன்னிடம் மயங்கியதுபோல,
இதற்கு முன் வேறு எவரிடமும் மனதைப்

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு, திண்டுக்கல்

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்
'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'
முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

பறிகொடுத்ததில்லை. எத்தனையோபேர் முயற்சித்தனர். எட்டி நில்! கிட்டே வராதே!! என்றேன். ஆனால உன்னிடம்!! எல்லோரையும் போலவா நீ! நீ, தனி!

அதென்ன! நான், மற்றவர்களைக் காட்டிலும் எதிலே சிறந்தவன்! எப்படிச் சிறந்தவன்!

தம்பி! உணர்ச்சி தோன்றிய நாள்தொட்டு, நடைபெற்றுக்கொண்டு வரும் 'உரையாடல்'தான்! காதலில் கட்டுண்ட நேரத்தில், பெருமூச்சும் பூங்காற்ருகத் தோன்றும்; பொருளற்ற பேச்சிலே ஒரு தனிச் சுவை தெரியும்; உள்ளம நெகிழ்ந்திடும் நிலை அலலவா! அதிலும் ஒரு பெண் 'சல்லாபம்' செய்வது என்று தீர்மானித்துவிட்டால், மயங்காத ஆடவன் ஏது!!

சல்லாபப் பேச்சோடு பேச்சாக அவள்,

"எனக்கு ஒன்று பிடிக்கவில்லை. உன்னுடைய தகுதிககும் திறமைக்கும் ஏற்ற வேலையிலா இருக்கிருய்...போயும் போயும் காவல் வேலை! அதிலும் யாருக்கு......

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவருக்கு!! அது என்ன சாமான்யமா...

தலைவர்! குடிஅரசுத் தலைவர்! யார்... கருநிறத்தான் தானே...

உன இனம்! உன் இனத்தவர் வெள்ளை மாளிகையிலே கொலுவிருப்பது உனக்குப் பெருமை அல்லவா......

என் இனம்! இன உணர்ச்சி அற்ற மனிதனை என் இனம் என்று எண்ணிப் பெருமை கொள்ள நான் என்ன முட்டாளா! எப்படியோ அங்கே இடம் கிடைத்துவிட்டது! அனுபவிக்கிருன்! அவ்வளவுதானே......

வியப்பாக இருக்கிறதே உன் பேச்சு... வெறுப்பாகப் பேசுகிருயே......மகிழ்ச்சியால் துள்ளுவாய் என்றல்லவா எண்ணினேன்...

மகிழ்ச்சியா? எதற்காக! என் இனத்தின் உரிமைக்காகப் போராடி வந்த இயக்கத்தை ஒழித்துக் கட்டினனே அதற்காகவா ...என் இனம் வறுமையிலிருந்து விடுபட, பெரிய தொகை தரச் சட்டம் கொண்டுவந்ததை வேண்டாமென்று கூறினனே, அதற்காகவா......

இவ்விதமாகப் பேச்சு தொடர்ந்திடவே, விருந்து பெற வேண்டிய நேரத்தில் வீணன விவாதம் நடைபெறுகிறதே, காலம் வீணுகிறதே என்ற கவலை பிறக்கிறது அவனுக்கு. துடியிடை! சுவை தரும் இதழ்! இனக் கவாச்சிமிகு ஈடில்லா இன்பம்! இவைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருன் அவன்! அவளோ கட்டிலறையில், அரசியல் பேசுகிருள்! அதிலும் வெறுப்பைக் கொட்டிக் காட்டும் பேச்சு! இடத்திற்கோ, நேரத்திற்கோ, நிலைமைக்கோ துளியும் பொருத்தமற்ற பேச்சு. அவளிடம் அவன் எதிர்பார்த்தது, கண்ணாளா! என்ற கொஞ்சு மொழி; அவளோ வெள்ளை மாளிகையில் உள்ள 'கருப்பன்' எங்கள் இனத் துரோகி என்று பேசுகிருர். திடுக்கிட்டுப் போனன். அதிலும், குடிஅரசுத் தலைவரின அருகே இருந்து வந்ததால் அவன் அறிந்திருந்த உண்மை நிலைமைக்கும், அவள் டில்மனைக் குறித்துப் போட்டிருந்த மதிப்பீட்டுக்கும் பொருந்தவே இல்லை.

ஒரு உண்மை கூறுகிறேன், உல்லாசி! அதைமட்டும்கேட்டிடு; மேற்கொண்டு அரசியல்பேச்சே வேண்டாம்; ஆடிப்பாடி மகிழ்ந்திட வேண்டிய நேரம் இது; அரசியல் பேச அல்ல! நான் அறிந்துள்ள உண்மையைக் கூறுகிறேன், கேள். டில்மன் நீ நினைப்பது போல கெட்டவன் அல்ல. வெள்ளை மாளிகையிலே வாழ்வதிலே சுகம்கண்டு அதிலே மூழ்கிக் கிடந்திடவில்லை. இனத்தைக் காட்டிக் கொடுத்திடும் கயவன் அல்ல, டில்மன். தன் இனத்திற்கு ஏதும் செய்திட முடியாத இக்கட்டான நிலைமையில் சிக்கித் தத்தளிக்கிருன்.........

என்ன சொல்லுகிருய்......? டில்மன், வெள்ளைமாளிகை வாழ்விலே இன்பம் கண்டு அதிலே மூழ்கி, தன் இனத்தையும் மறந்து கிடந்திடும் போக்கிலே இல்லை என்ரு சொல்லுகிருய்......

சொல்லப்போனல், வெளியே இருப்பவர்கள்தான் டில்மன் சொகுசான வாழ்க்கை வாழ்வதாக எண்ணிக்கொள்வார்கள்...... உண்மை என்னதெரியுமா...யாரை நம்புவது என்றுகூடத் தெரிந்துகொள்ள முடியாதநிலையில், டில்மன் தவிப்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். டில்மன் நிலைமையைப் பார்க்கும்போது எனக்கு 'ஐயோ பாவம்' என்று

தமிழ் நாட்டில் "தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

H. O. பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

ஆஸவங்களும் அரிஷ்டங்களும்

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.
போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் (**Recognised by Central Board of Indigenous Madicine Madras.**) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:

உரிமையாளர்: J. M. ராஜன்

ஜெயா பார்மஸி

6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.

PHONE: 348, 348-A, 438

இந்தவாரம் இந்த நாட்டில்...

புதுடில்லி, மார். 24—டாஷ்கண்ட் உடன்பாட்டின் உணர்வையும் விதிகளையும் பாக். மீறிக்கொண்டிருந்தால், இந்தியா ஒருதலையாக, சிநேக பாவத்துடன் இருக்க இயலாதென்று மத்திய மந்திரி சுவரண்சிங் கூறினார்.

கல்கத்தா, மார். 24—மேற்கு வங்கத்தில் உணவுப் போராட்டத்தின் அடுத்தக் கட்டமாக ஏப். 6-ல் மீண்டும் ஹர்த்தால் செய்வதென இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி அறிவித்துள்ளது.

சென்னை, மார். 25—இந்தியத் தொழில்களின் அழிவைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால், வெளி நாடுகளுக்கு இந்தியா தரவேண்டிய அசல், வட்டிகளைத் திருப்பித்தரும் முறையைஉடனடியாக மாற்றித் தீரவேண்டும் என்று ஐரோப்பிய வர்த்தக சபைத் தலைவர் ஜே. வி. ஜார்டின் பெடர்சன் யோசனை கூறியுள்ளார்.

சென்னை, மார். 25— பட்ஜெட் விவாதத்தின் போது, காங். மற்றும் எதிர்க்கட்சிகள் வெளி நடப்புச் செய்தபோது, பட்ஜெட் கூட்டத்தைத் தள்ளிவைத்து, ஜனநாயகத்தில் ஒரு புதிய மரபை ஏற்படுத்தியுள்ளது சென்னை மாநகராட்சி.

சென்னை, மார். 26—சென்னை நகர்ப்புற மனைவரிச் சட்டம் (1963) அரசியல் சட்டத்தின் 14-வது ஷரத்துக்கு முரணானது எனக் கூறி ஹைகோர்ட் தீர்ப்பளித்தது.

சென்னை, மார். 27—சென்னை அரசுக்குச் சொந்தமான மாதவரம் பால் பண்ணையில் 1954-முதல் இதுவரை ரூ. 114·50 லட்சம் நட்டம் ஏற்பட்டதாக அமைச்சர் ராமையா அறிவித்துள்ளார்.

கல்கத்தா, மார். 27-முற்றிலும் சீன ஆயுதங்களைக் கொண்ட ஒரு தரைப்படையை பாக். அரசு அமைத்துள்ளதாகவும், இன்னொன்று அமைக்கப்பட இருப்பதாகவும் ராஜதந்திர வட்டாரங்கள் கருத்தறிவித்துள்ளன.

போபால், மார். 28—ம. பி.யில் சட்டம், ஒழுங்கு அலங்கோலமாகி விட்டதால் சட்டசபையைக் கலைத்துவிட்டு, ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்று முக்கிய எதிர்க் கட்சிகள் கோரி இருக்கின்றன.

பம்பாய், மார். 28— ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கண்ட்ரோல் துணிகளின் விலைகள் 4 முதல் 6 சதவீதம் வரை உயர்த்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

சென்னை, மார். 29— சென்னை மேலவைக்கும், டில்லி மேலவைக்கும், தி. மு. க. உறுப்பினர்களாக, முறையே மதுரை முத்துவும், சி. வி. ராசகோபாலும், ஜி. பி. சோமசுந்தரமும், ஜி. கே. சுந்தரமும் (சுதந்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சென்னை, மார். 30— திட்டமிடும் முறைகள் உடனடியாக மாற்றியமைக்கப் படாவிடில், இந்தியப் பொருளாதார சீர்குலைவு தவிர்க்கப்பட முடியாதது என்று கே. சந்தானம் சொன்னார்.

தான் தோன்றுகிறது. சுற்றிலும் சூழ்ச்சிக்காரர்கள் எப்படி, எப்போது கவிழ்த்துவிடுவது என்று திட்டம் தீட்டியபடி உள்ள சதிகாரர்கள். தாங்கள் ஆட்டிவைக்கிறபடி அவன் ஆடவேண்டும், இல்லையென்றால் அவனைப் பதவியிலிருந்து விரட்டிடவேண்டும் என்றுஎண்ணும் சூழ்ச்சிக்காரர்களுக்கு மத்தியிலே கிடந்து திகைக்கிறான்......

உண்மையாகவா...டில்மன் வெள்ளையரின் விளையாட்டுப் பொம்மையாக இல்லையா?

யார் சொன்னது அப்படி......டில்மன், வெள்ளையர், கருப்பர் என்ற நிறத்தை அடிப்படையாக்கிக்கொண்டு கடமையைச் செய்ய வில்லை. நாணயமானவனாக நாலு நாள் பதவியில் இருந்தாலும் போதும் என்று எண்ணுகின்றவன். தன்னை வெள்ளையர் இழிவாக நடத்த விரும்புவதையும் உணருகிறான்; கருப்பர் தன்னிடம்வெறுப்புக்கொண்டிருப்பதையும் உணருகிறான். ஆனால் தன் மனச்சாட்சியின படி நடக்க முனைகிறான்; குடிஅரசுத் தலைவருக்கு உள்ள கடமையைச் செம்மையாகச் செய்திட விரும்புகிறான். மகிழ்ச்சி இல்லை! நட்பு காட்டுவோர் இல்லை! பரிதாபமான நிலைமை! இதுதான் உண்மை. சரி...சரி... மேலும் நமக்கு எதற்கு அரசியல்...வா! வடிவழகி! வாரி அணைத்திட நான் துடித்திடும் வேளையில், நீ மேலும் அரசியல் பேசி ஆயாசத்தை மூட்டிவிடாதே; வா!

அவள் வரவில்லை! துடிதுடித்து எழுந்திருக்கிறாள்; சற்றே தொலைவில் நிற்கிறாள். பாசப்பார்வை காணோம்! பாகுமொழி இல்லை! மையலூட்டும் நிலை இல்லை! கண்களிலே கொப்பளித்துக்கொண்டு வருகிறது கண்ணீர்.

பெருந்தவறு! பெரிய அக்ரமம் செய்யத் துணிந்தேனே! நானோர் பேதை! கலகக்காரர் பேச்சைநம்பினேன்; நாசவேலைக்கு உடந்தையானேன்...உண்மை புரிகிறது. டில்மன்... பாவம்...இந்நேரம் என்ன நேரிட்டிருக்குமோ ...மனம் பதறுகிறதே......என் இனத்தவரில் சிலர், டில்மன் இனத்துரோகி, ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கூறினர்; இணங்கினேன். இங்கு உன்னை மயக்கத்தில் கட்டிபபோட்டு வைக்கச் சம்மதித்தேன். என் சல்லாபத்தில் உன்னைச் சிக்கவைக்கச் சொன்னார்கள். அந்த நேரமாகப்பார்த்து, டில்மனை......அவர்கள்...தீர்த்துக்கட்ட...ஐயோ! என்ன ஆகி இருக்குமோ இந்நேரம்......

கட்டழகியிடம் கொண்ட மையல், சல்லாப உணர்ச்சி, வாலிபத் துடிப்பு எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் பறந்தது; அவன் நிலைமையை உணர்ந்துகொண்டான்; துடித்தெழுந்தான்; "அடி பாவி! சாகசக்காரி! சதிகாரி! விபசாரி!" என்று ஏசினான், உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டான்; அவளைக் கொன்றுவிடத்துடித்தான்; குடிஅரசுத் தலைவரின் நிலைமை எப்படியோ என்ற எண்ணம் அவனை செயலிலே துரத்திற்று. ஓடினான், ஓடினான்! காப்பாற்றவேண்டும்! கடமையைச் செய்தாகவேண்டும்! பரிதாபத்துக்குரிய டில்மன் பாதகர்களின் குண்டுக்கு விழாதபடி தடுததாகவேண்டும் என்று உறுதிகொண்டு, வெள்ளைமாளிகையை நோக்கி அம்பெனப் பாய்ந்தான்.

அவள் சொன்னபடியே சதிகாரர்களால் ஏற்பாடு செய்யப்பட்டபடி, தோட்ட வேலைக்காரனாக வந்திருந்த ஒருவன்—ஒரு நீக்ரோ—டில்மன் மீது குறிபார்த்து துப்பாக்கியால் சுடுகின்ற நேரம்; கடைசி விநாடி; வெள்ளை இனத்தவனாகப் பிறந்தும் நிறவெறியற்று, நீதியில் பற்று வைத்துப் பணியாற்றிட உறுதி கொண்ட காவலாளி, டில்மன் மீது பாயக் கிளம்பிய குண்டினைத்தான் ஏற்றுக் கொண்டு டக்ளஸ் டில்மன் உயிரைக் காப்பாற்றினான். அவன் மடியவில்லை, படுகாயமுற்றான்.

தம்பி! எத்தகைய வெறி உணர்ச்சி ஊட்டப்பட்டிருந்தாலும், நீதியிலும் நேர்மையிலும் நம்பிக்கை கொள்பவர்கள், வெறி உணர்ச்சியை உதறித்தள்ளி விடமுடியும்; மனிதனாக முடியும் என்பதை மெய்ப்பிக்கும் மன நெகிழ்ச்சி தரதக்க சம்பவமல்லவா இது!

உடல் வனப்பைக் காட்டி, வலை வீசி காமவெறி ஊட்டி வாழ்க்கை நடத்திடும் ஒரு பெண்ணே அல்லவா, உண்மை புரிந்ததும் உள்ளம் சுட்டதும், திருந்துகிறாள், ஒரு நொடியில்!

வாலிப முடுக்கு காரணமாகவும், இன்பம் பெறும் துடிப்பு காரணமாகவும், தன்னை மறந்து கிடந்திடும் நிலை பெற்ற போதிலும், தன்னையும் அறியாமல் ஒரு அக்ரம திட்டத்திற்குத்தான் உடந்தைஆக்கப்படுவதை உணர்ந்ததும், அந்த மனிதன், ஓடோடிச் சென்றானல்லவா, உல்லாசியை உதறித் தள்ளிவிட்டு, தன் உயிரை இழந்தாகிலும், தன்னை நம்பியுள்ள நாட்டுத் தலைவன் உயிரைக் காத்திட! இனவெறி எல்லோரிடமும் இடம் பெற முடியாது. மனித உள்ளம், எல்லா விதமான நெறியையும் மாய்த்துக் கொண்டு எழ முடியும் என்பதனை எடுத்து காட்டும் சம்பவமல்லவா இது! மனிதத் தன்மையை மாய்த்திட, மிருக உணர்ச்சியைக் கிளறிவிட எத்தனை கோடான சூழ்ச்சிகள் மூட்டப்பட்டு விடினும், எல்லோருமே பலியாகிவிடுவதில்லை; ஒரு சிலர் ஒப்பற்ற தனித் தன்மை காட்டி, தாங்கள் மனிதர்கள் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வருவதனால்தான், உலகு காடாகிப்போகாமல் இருந்து வருகிறது.

தன்னைக் கவிழ்த்திட சதிசெய்யும் வெள்ளையர்களும், தன்னிடம் வெறுப்பைக் கக்கிடும் நிலையில் தன் இனத்தவரும் இருக்கக்கண்டு இதயம் நொந்துகிடந்த டில்மனுக்கு, ஒரு சாதாரணக் காவற்காரன் காட்டிய இந்தத் தியாக உணர்ச்சி, நீதியில் பற்று, நேர்மையில் உறுதி, எவ்வளவு நெஞ்ச நெகிழ்ச்சி உண்டாக்கி இருந்திருக்கும்!

வெள்ளையர்—கருப்பர் என்ற இரு பிரிவாக மட்டுமல்ல மக்கள் இருப்பது; மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து டில்மன், புதியஉறுதிபெற்றிருக்க வேண்டும்.

அந்தப் புதிய உறுதியுடனேயே, டக்ளஸ் டில்மன் தன் மீது தொடுக்கப்பட்ட வழக்கைச் சந்தித்தான்; துளியும் கலக்கமின்றி; விளைவுபற்றிய கவலையற்று; கடமையைச் செய்கிறோம் என்ற மனத்திருப்தியுடன்.

அண்ணன்,



இந்த வாரம் வெளிநாட்டில்...

ஹாங்காங், மார். 24— மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி மாநாட்டுக்குவர முடியாது என்று சீனா அறிவித்துவிட்டதாக பீகிங் ரேடியோ அறிவித்தது.

வாஷிங்டன், மார் 25— நாட்டோ, கூட்டுப் பாதுகாப்பு மன்றத்திலிருந்து பிரான்ஸ் விலகுவதற்காக டிகால் நடவடிக்கை எடுத்துக் கொண்டதை அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன் கண்டித்தார்.

கொழும்பு, மார். 25—இலங்கையின் மாஜி பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சியின் தலைவருமாகிய திருமதி பண்டாரநாயகாவின் சகோதரர், மோசடிக்குற்றத்தில் ஈடுபட்டதாக வழக்குத் தொடுக்கப் பட்டிருக்கிறார்.

பான், மார். 26-பலாத்கார முறைகளைக் கைவிட்டு விடுவதுபற்றி ரஷ்யாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ஒரு உடன்பாட்டிற்கு வர மேற்கு ஜெர்மனி சம்மதம் அளித்துள்ளது.

ராவல்பிண்டி, மார். 27-சீன அதிபர் பியுஷாவோசி பாக். விஜயத்தை முன்னிட்டு ராவல்பிண்டிக்கு வந்தார். அவர் ஒரு வரவேற்பில் எல்லாச் சூழ்நிலையிலும் சீன நாட்டு 60 கோடி மக்களும், பாக்கின் உதவிக்கு வரத்தயாராக இருக்கிறார்கள் என்றார்.

போனஸ் அயர்ஸ், மார். 28 — தென் வியட்நாமில் ராணுவ ஆட்சியாளரை எதிர்த்து ஹியூ என்ற நகரில் 20,000 மேற்பட்ட பவுத்தர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

ராவல்பிண்டி, மார். 28— சீன அயல் நாட்டு மந்திரி சென்யீயும், பாக். மந்திரி புட்டோவும் வியட்நாம் போர் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

ஜோகன்ஸ்பர்க், மார். 28—ஒன்பதே வயது சிறுமி ஒருத்தி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள் என்றும் ஆப்பிரிக்காவிலேயே இந்த வயதில் குழந்தை பெற்ற முதல் சிறுமி இவள்தான் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகிங், மார். 29— சீனாவின் வடபகுதியில், அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து ரஷ்யா உதவிபுரிய முன்வந்ததை சீனா மறுத்துவிட்டது.

வாஷிங்டன், மார். 28— பாக். அரசுடன் யு. எஸ் செய்துகொண்ட ஒப்பந்தம் காரணமாக, பாகிஸ்தான் ராணுவ சீரமைப்பின் முழுப் பொறுப்பையும் அமெரிக்கா ஏற்றுக் கொண்டது மாபெரும் தவறு என்று, வாஷிங்டன் போஸ்ட் என்ற இதழ் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அபித்ஜான், மார். 29— கானாவின் நடுவில், நெக்ருமாவினுடைய இரு கொரில்லாப் பயிற்சி முகாம்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அங்குள்ள ஆயுதங்களும், தளவாடங்களும் கைப்பற்றப் பட்டன.

மாஸ்கோ, மார். 30— சோவியத்--சீனாவிற்கிடையேயுள்ள சித்தாந்தத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள பீகிங்கில், அல்லது மாஸ்கோவில் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என்று ருசியா, சீனாவுக்கு அறிவித்துள்ளது.

பதினெட்டாம் பகுதி

விந்தையான பெண்

சோலையப்பன் பிடித்திருந்த கரத்தை விடுவித்துக் கொள்ள, செந்தாமரை திமிறினாள்.

"விடுங்கள்! இதென்ன விளையாட்டு?"

"நச்சுப் பாம்பே! உனக்கு எல்லாமே விளையாட்டுதான்! பாண்டிய நாட்டில் கள்ளியும் காளானும் முளைத்து, ஆந்தையும் கோட்டானும் பவனி வருகின்றனவே—அதுவும் ஒரு விளையாட்டுத்தான்! பொன்னாட்டின் நலத்திற்காகப் பொங்கியெழும் சிங்க ஏறுகள் வெட்டி வீழ்த்தப்படுகிறார்களே அதுவும் ஒரு விளையாட்டுத்தான்! அந்த இரத்த வெறி பிடித்த..."

வெடுக்கென்று கையை இழுத்துக்கொண்டு, அவள் அறையின் ஒரு பக்கமாகப் போய் நின்றாள்.

"இதென்ன பேச்சு? இதென்ன பார்வை? உமக்கென்ன பைத்தியமா — அல்லது ஏதாவது கனவு கண்டுவிட்டு, இப்படியெல்லாம் தாறுமாறாகப் பிதற்றுகிறீர்களா?"

"ஆமாம்! கனவு கண்டேன்! கேளடி அந்தக் கனவை! கப்பிய காரிருளுக்கிடையே, சிறியதோர் குன்று! வீசுகின்ற சூறுவளிக்கிடையே, அதன் உச்சியில் ஒரு தீப்பந்தம், ஆடவில்லை, அசையவில்லை! அதன் அண்மையில் இரத்தக் கறை படிந்த சிறு மேடை. எக்காளச் சிரிப்புக் கிடையே எங்கிருந்தோ ஓர் வரிப்புலி வந்து மேடையில் அமர்கிறது. அங்குமிங்கும் பார்க்கிறது. குன்றின் அடிவாரத்தில், செல்லுமிட மறியாமல் தவிக்கின்ற பத்துப் பதினைந்து காளைமாடுகளை, கையில் அகல் விளக்கேந்திய குள்ளநரியொன்று வழி காட்டி, புலியிடம் அழைத்து வருகிறது. சூறைக் காற்றின் வேகம் மிகுகிறது. ஆனாலும் தீப்பந்தமோ, அகல் விளக்கோ சுடர் பறக்கவில்லை!!

ஒவ்வொருமாடாகக்குன்றின் உச்சிக்கு அழைத்து வரப்படுகின்றன. புலியைக் கண்டு மிரளும் மாட்டைப் பார்த்து நரியும் சிரிக்கிறது. புலியும் சிரிக்கிறது. அப்புறம் என்ன...... எதிர்த்து, எதிர்த்து இறுதியில் எல்லா மாடுகளுமே பலியாகின்றன......புலியின் கோரப் பற்களிடையே சிக்கிச் சிதைகின்றன.

உதிரும் உதிரத்தில் நரி நாக்கைப் புரட்டிச் சப்புக் கொட்டிக் கொள்கிறது!"

"விசித்திரமான கனவு..."

"ஆமாம்! விசித்திரமதான்! உயிர் குடித்த புலி உணர்ச்சிப் பிழம்பாய் உறுமிக்கொண்டிருக்கிறது. அருகே உதிரம் குடித்த நரி, நகைத்துக் கொண்டிருக்கிறது. அப்போது..."

"அப்போது..."

"அவசரமாகத்தானே இருக்கும்! ஆடாத சுடர்கள் அசையத் தொடங்குகின்றன. அசைவு அதிகமாகிறது. அதனால் விளக்கும் பந்தமும் அணைந்து போகின்றன...... அணைந்த திரிகள் புகை கக்குகின்றன அந்தப்புகை அந்த சூழலையே கப்பிக்கொள்கிறது புகைமண்டலத்திற்கிடையே புலியும், நரியும் மறைகிறது...மெல்லிய பூங்காற்று திரி மீண்டும சுடர்விடுகிறது. புகை மறைகிறது. புலியிருந்த இடத்தில் இப்போது தூமகேது! நரி இருந்த இடத்தில ஒரு வஞ்சகி! நச்சுக் கனி! பாண்டிய நாட்டு வீரர்களை மாடுகளைப்போல் பலி கொடுத்த சண்டாளி! யார் தெரியுமா அது?"

"கனவு கண்டது நீங்கள்தானே!"

"கனவு கண்டதும், காண்பதும், காணப்போவதும் நான்தான்! நான்தானே சொல்லவேண்டும்! சொல்கிறேன்... அந்த நச்சுக் கனி, காளையர் நெஞ்சிலே காமக் கனலேற்றும் அந்தக் கள்ளி யார் தெரியுமா...... நீ! நீ!!"

"என்ன?"

"ஆமாம்! நீதான் அந்த விஷக் கன்னி!"

"கனவில்தானே!"

"கனவு, உண்மையைத் தெளிவாக்க நான் செய்த கற்பனையடி அது! கனவு கண்டுவிட்டு இப்படிப் பிதற்ற, நான் என்ன முட்டாளா— அல்லது பித்தனா? செந்தாமரை, என்னிடம் இனி நீ எதையும மறைக்க முடியாது! தூமகேதுவினால் எறியப்படும் நச்சுத் தடவப்பட்ட அம்பு நீ! அதை நான் அறிவேன்!" என்று கோபத்தோடு வார்த்தைகளைக் கொட்டியவனை, செந்தாமரை நன்றாக ஏறிட்டுப் பார்த்தாள்.

"கள்ளக் கருத்தோடு காதல் பேச்சு பேசுகிறார் என்று நான் சந்தேகப்பட்டது சரியாகிவிட்டது! என்னைப்பற்றி இவரிடம் யாரோ, ஏதோ கூறியிருக்கிறார்கள்! அது உண்மையா என்று தெரிந்துகொள்ளவே, இந்தக் கெட்டிக்காரர், காதல் நாடகம் ஆரம்பித்தார்! ஒரு சிறு வேலை—உறுமிக்கொண்டு எழுந்து, மனிதர் உண்மையை ஒத்துக் கொண்டார்! சரி, இப்பொழுது எரிமலையாகிவிட்டிருக்கும் இவரை, எப்படிப் பழையபடி பெட்டிப்பாம்பு ஆக்குவது?"

இப்படி அவள் மனதில் சிந்தனை படர்ந்தது. அவள் கண்களின் பிரகாசம் அதிகமாயிற்று? ஆமாம், ஒருவழி அவளுக்கு உதயமாகிவிட்டது!

'என்னடி ஆந்தைபோல விழிக்கிறாய்? கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டோமே—இப்பொழுது என்ன தந்திரத்தைக் கையாண்டு தப்பலாம என்று யோசிக்கிறாயா!"

ஆத்திரத்தால அவனுக்கு வார்த்தைகள் தடுமாறின.

'யோசிக்கிறேன்-உண்மைதான! உரைகல்லில் தேய்த்துப் பார்த்த

விற்பனையாளர்களுக்கு

எல்லா "காஞ்சி" விற்பனையாளர்களுக்கும் மார்ச் மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. மார்ச் இறுதியுடன் கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால், மார்ச் பில்லுடன் சேர்த்து முழுத் தொகையும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர். 'காஞ்சி'

பிறகும், இது பித்தளை இது தங்கம் என்று தெரிந்துகொள்ளச் சக்தியில்லாதவரைப்பற்றி என்ன சொல்வதென்று யோசிக்கிறேன்!'

'கபோதி என்று......'

'ஆமாம் தங்கள் கருத்தில் கபோதித்தனம் கவ்விக்கொண்டிருக்கிறது! இல்லாவிட்டால்......'

'குப்பையில் வீசியெறிய வேண்டிய பித்தளையை, இத்தனை நாட்களாகப் பத்தரைமாற்றுத் தங்கம் என்று எண்ணிக்கொண்டிருந்திருப்பேனா? தூமகேதுவின் ஒற்றர்களில் ஒருத்தியான உன்னை, மானமிழந்த உன்னை, பண்புகெட்ட உன்னை...'

'வார்த்தைகளில் மரியாதை வேண்டும்! இப்படித்தான் முன் பொருசய்யம பொன்னையாவின் கல்லறையின் அருகே......'

'வீரம் பேசி என்னை நம்பச் செய்தாய்! இப்பொழுது உன எதிரில் நிற்பது அந்தப் பழைய சோலையப்பன அல்ல, புதுச் சோலையப்பனடி நான்!'

'ஆமாம் அஞ்சலையின் காதலர்-புதுச் சோலையப்பர்!!

'புழுதியில் புரளுபவளே, அந்தப் புனிதவதியின் பெயரை உச்சரிக்கக்கூட, உனக்குத் தகுதியில்லை!

'புனிதவதி! வேடிக்கையாக இருக்கிறதே தங்கள் பேச்சு! கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் கூறினீர்கள், அவளொரு காமவெறிபிடித்த காதகி என்று! அந்த மாசுமணி—தூங்கியெழுந்ததும்—மாசிலாமணி ஆகிவிட்டாளா? கனவாக உங்கள் கற்பனை ஓடியதே, அதைவிட வேடிக்கையாக இருக்கிறது இப்பொழுது தங்கள் நாக்கு அசைவது!'

'அப்படி நான் நடித்தேன்!' நீ யார் என்றுதெரிந்துகொள்வதற்கு!'

'அந்த நடிபபை அபபொதே நான் தெரிந்துகொண்டேன!'

"என்ன?"

"ஏன் அன்பே, இவ்வளவு ஆச்சரியததோடு பாாககுநீர்! இநதச் செந்தாமரை அவ்வளவு முட்டாள் அல்ல-நடிபபையெல்லாம் நிசம என்று நமபி, மொாககிச சுருணடுவிட! ஏது உணமை, எது பொய் என்று பகுததறிவதற்கான நிதானம என்னிடமிருக்கிறது! அந்த நிதானம தங்களிடம இல்லாததினுல்தான், இபபடி ஆடிககுதிதது ஆரவாரம செய்கிறீா!......சரி, இப்பொழுது தாங்கள் உறுமிககுதிப்பதற்குக் காரணம், தூமகேதுவின ஒற்றர்களில் ஒருததி நான என்ற சந்தேகததினுலதானே?"

'உருப்பெற்ற அந்தச் சந்தேகம், இப்பொழுது என் உள்ளத்தில் ஊன்றிவிட்ட உண்மையாகிவிட்டது!'

'எதைக்கொண்டு, தாங்கள் அதை உணமை என்று தீாமானித்தீா?'

'உன் கள்ளச் செயலைக் கண்டு!'

'இந்த மர்மபபேச்சு, இனி பயன் படாது! அலங்காரமில்லாமல் நேரடியாகவே ஆதாரங்காட்டிப் பேசுங்கள்!'

'நீ ஒரு நச்சுக்கனி!'

'அதற்குததான் ஆதாரம் கேட்கிறேன!'

'நான் நன்ருகத் தூங்குகிறேன் என்ற தைரியத்தினுல்தானே, நீ ஓலை எழுதினுய்?'

'ஆமாம்!'

'அந்த ஓலை யாருக்கு?'

'தாங்கள அறியவேண்டிய அவசியமில்லாத விவரம் அது!'

'நீ அதைத் தூமகேதுவிற்கு எழுதினுய் என்று நான் சொல்கிறேன்!'

'நான் இல்லை என்கிறேன்!'

'அப்படியானுல், பெட்டியினுள் மறைத்துவைதத ஓலையை எடு — அது ககிவிட்டுப் போகிறது உணமையை!'

'அதை எடுக்க முடியாது!'

'மாபெருங்கள்ளி நீ என்று, இந்தச் சொல்லே உன்னைக் காட்டிக் கொடுக்கிறது!'

'தூமகேதுவிற்கு அல்லாமல், வேறு எவருக்கேனும் ஏன் நான் எழுதியிருக்கக்கூடாது?'

'இந்தப் பாண்டிய நாட்டில் அவனைத் தவிர வேறு எவனிருக்கிருன்—உன் ஓலையைப் படிக்க?'

'ஏன் தாங்கள் இருக்கிறீரே!'

'உன் பாகு மொழியை நம்ப......'

'பழைய சோலையப்பன் அல்ல என்பீர்!'

'வீண்பேச்சு எதற்கு? இதோ பெட்டியைத் திறந்து நானே அந்த ஓலையை எடுக்கிறேன்!'

'நில்லுங்கள்! பெட்டியின் அருகே செல்லாதீர்—திறக்காதீர்!'

'மீறினுல் என்ன செய்வாய்?'

'கோபததில் என்ன செய்வேனே—அது எனக்கே தெரியாது! யானை இருக்கிறதே அதிக பலமானதுதான—தரையில் இருககும்போது. ஆனுல் அது நீரில் இறங்கிவிட்டால் அருகே இருக்கும் முதலைக்கு அஞ்சித்தான் ஆகவேண்டும்! முதலை யானையைவிட, நூறு பங்கு உருவில் சிறியதுதான! ஆனுல் இடபேதம் அலறி ஆவிவிடச் செய்ததாகக் கேடடதில்லையா தாஙகள்? நான் பெண்தான்! ஆனுல் அந்தப் பெண்ணின் வீட்டில்தான், இப்பொழுது தாங்கள் இருக்கிறீர்—நீரில் யானை இறங்கிவிட்டதைப் போல — நினைவிருக்கட்டும்!'

'பசப்பிப் பார்த்தாய், பாச மொழி விரித்துப் பார்ததாய்— பயன் காணுததினுல்—இப்பொழுது பயமுறுததிப் பார்க்கிருயா? மண்ணே பிளந்தாலும், விண்ணே அதிர்ந்தாலும் மனத் தளர்ச்சி கொள்ளாதவனடி! நான!"

"தெரியும். அஞ்சாநெஞ்சர் ஆளவந்தாரின் மகனுா தாங்கள் என்று!'

"நீயே பெட்டியைத் திறநது அந்த ஓலையை எடு — அல்லது விலகி நில் — நானே எடுத்துக கொள்கிறேன்!' என்று அவன் எதிரே வழிவிடாமல் தடுத்து நின்ற அவளைப் பார்த்து, கட்டளையிடும குரலிலே பேசினுன்.

"அந்த ஓலையைத் தாங்கள் பார்க்கக்கூடாது — பார்க்கவிடப்போவதில்லை!"



"பார்க்கவிடப் போவதில்லையா?" என்று ஆத்திரததோடு சொல்லிக்கொணடே, அவள துவளைக் கரததை ஒரு கையால்பிடிததுக்கொணடு, மற்றொரு கையால் அவன் பெட்டியைத திறந்து, ஓலையை எடுததான்.

அதில் எழுதப்பட்டிருந்ததை, மேல் நோக்காகப் பாாததான். அது கடிதமாகத தெரியவில்லை-ஏதோ கவிதைகளாகத தோன்றின!

"பிரிந்தார் பிரிந்துரைத்த
பேரருளின் நீழல்
இருந்தோங்கி வாழ்வார்
உயிர்ப்புறத்தாய் மாலை
உயிர்புறத்தாய் நீயாகில்
உள்ளாற்கு வேந்தன்
உயிற்புறத்து வேந்தனொடு
என்னுதி மாலை!"

ஓலையில் எழுதப்பட்டிருந்த இந்த முதற்பாடலை அவன் மெலலிய குரலில் படிக்கக் கேட்டதும், செந்தாமரை அந்த அறையைவிட்டு வெளியே செல்லத் தொடங்கினாள்.

"போகாதே.........நில்.......செந்தாமரை!"

"தூமகேதுவிற்கு அல்ல இந்த ஓலை என்று தெரிந்துகொண்டீர் அல்லவா—இன்னும் எதற்கு இங்கு நான் நிற்கவேண்டும்?" என்று புருவத்தை நெரித்தபடி கேட்டாள்.

"செந்தாமரை, நீ பெரும்புதிராக இருக்கிறாய் — உன்னை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை!" என்று தயக்கத்தோடு அவன் கூறினான்.

"இவளென்ன மாயக்காரியா அல்லது நான்தான் — மந்தபுததிக்காரனா! இவளைப் பார்ததால் ஒரு சமயம அன்பும், இன்னொருசமயம் ஆத்திரமும் பொங்குகிறதே! இதென்ன விசித்திரம்! பூத்தமலரை நாடிச்செல்லும துமபியா, அல்லது எரியும விளககில் விழவரும் விட்டில் பூச்சியா — இந்த இரணடில் எது நான் என்றே புலனாகவில்லையே! இதென்ன குழப்பம்!......தூமகேதுவன ஒற்றாகளிலே இவளும் ஒருத்தி என்று எனக்கு நானே முடிவு செய்துகொண்டு, அந்த அவசர புததியினால், எவ்வளவு கீழ்த்தரமாக நடநதுகொண்டேன்! எது உண்மை, எது பொய் என்று பகுத்தறிவதற்கான நிதானம் என்னிடமிருக்கிறது — அநத நிதானம் தங்களிடம் இல்லாததினாலதான், இபபடி ஆடிக்குதிதது ஆரவாரம் செய்கிறீ-என்றாளே செந்தாமரை! அது எவ்வளவு உண்மை என்பது இபபொழுதுதானே புலனாகிறது! அநத நிதானம என்னிடம இல்லாததினால்தானே, ஆவேசததோடு பேசி, இன்று அவமானததிற்கு ஆளாகவிட்டேன்!" என்று சோலையபபன் வெட்கமடைந்தான.

அருகில் வந்து நின்ற செந்தாமரையை ஏறிட்டுக்கூடப் பார்க்க தைரியமிலலாதவனாக, அவன் தரையைப் பாாத்தபடி நின்றான்.

"தூமகேதுவின் ஒற்றர்களில் ஒருத்தியான என்னை, மானமிழந்த என்னை, பண்புகெட்ட என்னைப் பற்றி, இந்த ஓலை என்ன சொல்கிறது?" என்று [illegible]ளனச் சிரிப்போடு அவள் கேட்டாள்.

"அவசரக்காரன் நான்?" என்று வெட்கமும் வேதனையும் கலந்த குரலில் அவன் கூறினான்.

"அவசரக்காரர் மட்டுமலல— ஆணவக்காரரும் தாங்கள் என்பதை—முதன் முதலாகச் சந்தித்த அன்றே, நான் தெரிந்துகொண்டேன்!......இப்பொழுது என்னைப் பற்றி என்:ன நினைக்கிறீர்கள்?" என்று கோபமும் வெறுப்பும கலந்த குரலில் கேட்டாள்.

"இருளில் என்னால் ஒன்றையுமே காணமுடியவில்லை!"

"துமகேதுவை எப்படியும் பாண்டிய நாட்டைவிட்டு விரட்டவேண்டும் என்பது, என் வாழ்க்கையின் இலட்சியம் என்றேனே, அன்று சுடலையில் — அதை இப்பொழுது நம்புகிறீர்களா?"

"செந்தாமரை, என்தலை சுற்றுகிறது! நீ சொல்வதை என்னால் நம்பவும் முடியவில்லை — நம்பாமல் இருக்கவும் முடியவில்லை! எல்லாமே எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது?"

"உத்தமர் பொன்னையாவின் உயிர்த் தோழரான தாங்களும் உத்தமராக—இலட்சியப் பெருந்தகையாக-இருப்பீர் என்று நான் எண்ணிவிட்டேன்! அந்த எண்ணத்தினால் தான் வலியவந்து பேசினேன்! அந்த வஞ்சக தூமகேதுவின் பார்வையில் தாங்கள் பட்டுவிடக்கூடாதே என்று பயந்துதான்—வெளி அரவமே அடங்கிவிட்ட அர்த்தராததிரியில்—இருள் வேளையில், பிணங்கள் வேகும் இடுகாட்டிற்கும் வர நான் துணிந்தேன்! என் இலட்சிய வெறியைப் புரிந்துகொள்ளாமல், என்னைப்பற்றி ஒரு அலட்சியமான அபாண்டமான முடிவிற்குத் தாங்கள் வந்துவிட்டீர்! இது உமது தவறு அல்ல! நீங்கள் பிறந்த ஆண் இனத்தின் இயற்கைப் புத்தியே அப்படி! அந்த உமி மேட்டிலே யாரோ ஒருவர் இரு[illegible]வர்தான் பொன்னையா போன்ற மணிகள் இருக்கமுடியும்! பொன்னையாவின் வரலாறு உமக்குத் தெரியும்—ஆகவே பொன்னையா என்றதும், உணர்ச்சி வயப்பட்டு உறுதியும் உக்கிரமும்கொள்கிறீர்! இந்த நாட்டியக்காரி செந்தாமரையின் வாழ்க்கை—செந்தணலிலே போட்டெடுத்த இந்தத் தஙகக்கட்டியின் சரிதை உமக்குத் தெரியாது? எனவே எதற்கெடுத்தாலும— ஐயம் கொள்கிறீா — ஏளனமாகப் பேசுகிறீா!"

"என்னை வாட்டாதே செந்தாமரை—பைத்தியமே பிடித்துவிடும போலிருக்கிறது! இப்பொழுது எனக்கு விடைகொடு—திருமபவும் நாளை நாம் சந்திப்போம்!"

"போகாதீர்! நில்லுங்கள்! இந்தச் செந்தாமரை எததகைய குணங்கெட்டவள் என்று தெரிந்துகொண்டு, பிறகு செல்லுங்கள்! நான் யார் என்பதைக்காட்ட முடிவு செய்துவிட்டேன்! அதன்மூலம் தங்களது அனபையோ, ஆதரவையோ பெறவேணடுமென்ற எண்ணத்தால் அல்ல, எனமீது தாங்கள் தூவிய மாசைத் துடைத்துக்கொள்ள!... என்னோடுவாருங்கள்!"

"எங்கே போகிறாய் செந்தாமரை?"

"அடுத்த அறைக்கு!"

அந்தக் கட்டிலறைக்குப் பக்கத்திலிருநத வேறொரு அறையின் கதவை அவள திறந்தாள்.

"உள்ளே சென்று பாருங்கள்! இந்தச் செந்தாமரை குணககுன்றா, குபபைமேடா என்று தெரிந்துகொள்வீர்கள்!"

திறந்த அந்த அறையினுள் அடியெடுதது வைததது்ம — அங்கே கண்ட காட்சி — சோலையப்பனின் இருண்ட இதயத்திற்குள் ஏதோ மின்னல் கீறறு போன்ற ஒளியைப் பாய்ச்சியது! திடீர் அதிர்சசி அவனது உடலிலே ஒருவித சிலுசிலுப்பை உண்டாக்கியது! காணபது கனவுதானோ என்ற ஓர் ஐயம்! உள்ளததில பீறிட்ட உணர்ச்சி ஊற்றுகள, ஒவவொரு மயிர்க்காலின வழியாகவும் வெளியே கிளமபுவதுபோல அவனுககுத் தோன்றியது!

[வளரும்]

4-ம் பக்கத் தொடர்ச்சி

எனவே கேட்டதும் கொடுக்கிருர்கள் என்பதி லேயே மகிழ்ந்து கிடந்துவிட்டு, இங்கு செய்திட வேண்டியனவற்றைச் செய்யத் தவறிவிடுவது தவறு; தீது; எதிர்கால ஆபத்துமாகும்.

வசந்தம் வீசுகிறது! புத்தம்புது மலர்கள் எழி லுடன் குலுங்குகின்றன! என்றெல்லாம் சிந்து பாடிட லாம் கேட்கச் சுவையாகவும் இருக்கும். ஆனல் வசந்தத்தின் வசீகரத்திலேயே சொக்கிப்போய் செய லற்று இருந்துவிடக் கூடாது! பட்டினிச்சாவு எனும் பயங்கரத்தைத் தடுத்து நிறுத்திட அமெரிக்கா முன் வந்திருக்கிறது; ஆகவே பயமில்லை என்ற மனநிலை யுடன், நாட்டுவளத்தை நல்ல முறையில் வளர்த்திடும் செயலில் அம்மையார் தமது அரசினை ஈடுபடுத்த வேண்டும்; துரிதமாக; திறமையுடன்.

சளிவான பேச்சாலும், கண்ணியமான போக்கா லும், அமைந்துவிட்டுள்ள புகழொளியினுலும், வெளி நாட்டு உதவியைக் கேட்டுப் பெறுவதிலே வெற்றி கண்டிடலாம்.

ஆனல் கடுமையான உழைப்பு, நேர்மையான நிர்வாகம், சீரான செயல்முறை, முழு அளவில் மக்க ளின் ஒத்துழைப்பு, இவைகளின்மூலமாகவே, நிலையான வளத்தை நாட்டிலே காணமுடியும்.

அந்தக் கட்டம், வசந்தம்போல வசீகரமாக இருந் திடாது. கோடையின் வெப்பம் போலக் கொதித்திடும் நிலைமை. ஆனல் ஒரு நாட்டிற்குத் தேவையான 'உயிர்ப்புச்சக்தி' அதன் மூலமாகத்தான் பெறமுடியும்.

வசந்தம் கண்ட அம்மையாரை,இந்தக்'கோடை'க் கால வேலையைக் கவனித்திட அழைக்கின்ருேம்.

சூதாடி!

'சூதாடி'க்கு ஒப்பானவர்கள் காங்கிரஸ் ஆட்சி யினர் என்று குற்றம் சாட்டிப் பேசியிருக்கிருர்—காங் கிரசை எதிர்த்திடும் கட்சியினர் அல்ல — காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவர்—திரு. சந்தானம் அவர்கள்.

'சூதாடி'க்குத் தோல்வி ஏற்பட ஏற்பட வெறி வள ரும்; மேலும் மேலும் அதிகத் தொகையை வீசுவான் ஆட்டத்தில்—இழந்ததைத் திரும்பப் பெற்றிட. அந்தப் பெருந்தொகையையும் இழந்திடுவான்; இடர்ப்படுவான்.

'சூதாடி' தன்தோல்விக்கு என்ன காரணம்? முறை யிலே என்ன கோளாறு? என்பதனைக் கண்டறியும் பொறுமை உணர்ச்சி காட்டமாட்டான்! பணத்தை இழக்க இழக்கப் பதறுவான், துடிதுடிப்பான், அதன் காரணமாக முன்பு இருந்துவந்த நிதானமும் கெட்டுப் போகும்; இழப்பு அதிகமாகும்.

'சூதாடி' பணத்தை இழந்திடும்போது, இவ்வளவு நட்டம் ஏற்பட்டுவிட்டதே என்று கவலைப்பட்டு, மேலும் தொடர்ந்து சூதாடினல் நட்டம் ஏறிக்கொண்டு போகுமே என்பது பற்றி அச்சப்பட்டு இவ்வளவோடு நிறுத்திக்கொள்வோம் என்று இருந்துவிடமாட்டான். ஐம்பது போய்விட்டால், மறுமுறை நூறு பணயம் வைத்து, முன்பு இழந்ததையும் சேர்த்துப் பிடித்திட வேண்டும் என்ற துடிப்புடன் செயல்படுவான்! மேலும் நட்டத்தைத் தேடிக்கொள்வான்.

சூதாடி எப்படியும் தனக்கு வெற்றி கிடைத்து விடும், ஆதாயம் வந்திடும் என்று எண்ணிக்கொள் வான்! ஆதாயம் பெற்றிடத்தக்க விதமாக சூதாடும் தனித்திறமை தனக்கு இருப்பதாக எண்ணிக்கொள் வான்; ஏமாற்றம் தாக்கத் தாக்க எரிச்சல் மூண்டிடும்! அந்நிலையில் எவருடைய நல்லுரையையும் காது கொடுத்துக் கேட்கமாட்டான்; எல்லாம் எனக்குத் தெரியும் என்று எக்காளமிடுவான்.

'சூதாடி' அடுத்த முறை வெற்றி தனக்கு நிச்சயம் என்ற நம்பிக்கையைக் கட்டிப் பிடித்தபடி, தொடர்ந்து கேட்டினைத் தேடிப் பெற்றுக்கொள்வான்.

'சூதாடி'யின் நினைப்பு ஆதாயத்தின்மீது! நிலைமை, அதனை எப்படிப் பெறுவது என்பது பற்றிய தெளிவை மாய்த்துவிடும்; தோல்வி ஏற்பட ஏற்பட மனக் குழப்ப மும், ஏமாளித்தனமான ஓர் துணிவும் பிறந்திடும். எதனையும் பணயப் பொருளாக வைத்திடவும், எதனை இழந்திடவும் துணிவு பெற்றிடுவான்.

'சூதாடி'யின் நிலைமையுடன் ஒப்பிட்டுக் காட்டு கிருர் திட்டம் தீட்டிச் செயல்பட்டு வரும் காங்கிரஸ் ஆட்சியினரை; அவர்கள்மீது கசப்போ, கடுப்போ கொண்டவரல்ல, அவர்களிடம் கனிவு கொண்டவர், தொடர்பு கொண்டவர், திரு சந்தானம்.

'சூதாடி' என்று காங்கிரஸ் ஆட்சியினரைக் கண் டிக்கிருேமே, என்ன செய்வார்களோ என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில் அவர் இல்லை; இச்சகம் பேசி யாவது இடம் பிடித்துக் கொண்டாக வேண்டும் என்ற பரிதாப நிலையில் அவர் இல்லை.

'சூதாடி' என்று கண்டித்திடும் சந்தானம் எதிர்க் கட்சியினராக இருந்திடின், அவர்மீது தூற்றல் பாணங் களைத்தொடுத்திட, பழிசுமத்திட, பதவிபிடித்திட முயற் சிக்கிருர் என்று கூறிட முடியும்; சிலர் அதனை நம்பிட வும் செய்வர்.

'சூதாடி' என்று துணிந்து கூறிடும் சந்தானம், ஆளுங்கட்சியான காங்கிரசின் கோபத்தைத் தாங்கிக் கொள்ளலாம், ஆனல் நாட்டுநலனுக்கு ஏற்ற உண்மை யினை உணர்ந்தும் வெளியே எடுத்துக் கூறத் துணி வற்று இருப்பது மக்களுக்கு இழைத்திடும் துரோகமாகி டுமே என்பதற்கு அஞ்சியே, எவர் எம்முறையில் ஏசிடினும் சரி, உண்மையை உரைத்தே ஆகவேண் டும் என்று முனைந்திருக்கிருர்.

'சூதாடி' எப்படி சீட்டாட்டத்திலோ, குதிரைப் பந்தயத்திலோ பணத்தை இழக்க இழக்க, இழந்த தொகையைக் காட்டிலும் பெரிய அளவுத் தொகை யைப் பயணம் வைத்தால்தான் இழந்ததனைத் திரும்பப் பெறமுடியும் என்ற ஏமாளித்தனமான எண்ணம் தடித்திடும் நிலை பெறுகிருனே அதுபோல, காங்கிரஸ் ஆட்சியினர், தாம் தீட்டி, செயல்படுத்தும் திட்டங் களிலே தோல்வியும் நட்டமும் வளர வளர, மேலும் அதிகமான அளவு பணத்தைப் பாழடிக்கின்றனர். காங்கிரஸ் ஆட்சியினர், திட்டத்தில் ஒரு பகுதிகெட்டு விடும்போது, அதனல் பொருள் நட்டம் மிகுந்திடும் போது, முன்பு தீட்டப்பட்டதைக் காட்டிலும் பெரிய அளவில் திட்டம் தீட்டுவதும், முன்பு செலவழிக்கப் பட்ட தொகையைக் காட்டிலும் பெரிய அளவுள்ள தொகையை வீசி, புதுப்புது இழப்புகளை வருந்தி வேண்டி அழைத்துக்கொள்ளும் 'சூதாடி' நிலையில் உள்ளனர் என்பது திரு. சந்தானத்தின் கருத்து.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவைப் படும் பெரும் பொருளை, நாட்டுமக்களிடமிருந்து திரட் டிக்கொள்வது இயலாது என்பது அவர் கருத்து.

அவரைப்போலவே, பொருளாதாரப் பிரச்சினைகளிலே தெளிவு உள்ளவர்களும், எச்சரித்திருக்கிறார்கள்.

'அகலக் கால்வைப்பது' என்று கொச்சையாகக் கூறுவார்களே, அம்முறையிலேதான் திட்டம் தீட்டிச் செயல்படும் காங்கிரசார் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டுகிறார் சந்தானம்.

திட்டமிடுகிற முறை முழுவதும் மாற்றி அமைக்கப்பட்டாலொழிய, பொருளாதார முனையிலே விபத்து, நாசம், நலிவு ஏற்பட்டுவிடுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்று எச்சரித்துள்ளார்.

திட்டமிட்ட பொருளாதார முறையே கூடாது என்று சந்தானம் அவர்களோ, அவர் காண்பது போன்ற குறைபாடுகளைக் கண்டறிந்து எடுத்துக் கூறிடும் போக்கினரோ, கூறவுமில்லை; கருதிக் கொண்டும் இல்லை; ஆனால் திட்டமிட்ட பொருளாதார முறை கேவலம் சூதாடி மனப் போக்கின் மீது அமைக்கப் படக்கூடாது; துணிவு இருக்க வேண்டியதுதான், ஆனால் துணிவுக்கு அடிப்படையாகத் தெளிவு இருக்க வேண்டும் என்பதனைத்தான் வலியுறுத்தி வருகிறார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தன்னாலே ஏற்பட்டுவிடும் என்றோ, சில தொழிலதிபர்களின் ஏகபோக உரிமையாக்கப்பட வேண்டுமென்றோ கருதுபவர்கள் மட்டுமே, திட்டமிட்ட பொருளாதார முறையைக் குறைகூறுகிறார்கள் என்று உள்ளபடி ஆளவந்தார்கள் எண்ணிக்கொள்கிறார்களென்றால், அவர்களுடைய ஏமாளித்தனம் கண்டு பரிதாபப்பட வேண்டும்; குறை கூறுபவர்கள் மீது சேறு இறைக்க இவ்விதம் பேசுகிறார்கள் என்றால், வன்மையாக அவர்தம் போக்கைக் கண்டித்தாக வேண்டும்.

திட்டமிட்ட பொருளாதார முறையின் அடிப்படையில், இதற்கு முன்பு நினைத்துப் பார்த்திருக்கவும் முடியாத பெருந் தொகை செலவிடப்பட்டு வருகிறது.

திட்டமிட்ட பொருளாதார முறையின் பெயர் கூறி இதற்கு முன்பு இருந்த எந்த அரசும் விதிக்க நடுங்கிடும் அளவு வரித் தொகையைப் பொது மக்களிடம், கசக்கிப் பிழிந்து பெறப்பட்டு வருகிறது.

திட்டமிட்ட பொருளாதார முறையின் பெயரால், பொது மக்கள் பல விதமான கட்டு திட்டங்களைத் தாங்கித் தீரவேண்டி நேரிட்டு விடுகிறது.

இவ்வளவும் நாட்டு மக்களின் மீது சுமத்தப்படும் பெரிய பளுவாக அமைந்துவிடுகிறது.

இதற்கு மேலாக, திட்டமிட்ட பொருளாதார முறையின் பெயரால் வெளிநாடுகளிடம் வாங்கப்பட்டு வரும் கடன் சுமை பெருத்துக்கொண்டே வருகிறது; எதிர்காலத்தவரின் வாழ்க்கையையே வளைத்துவிடத் தக்கதாக, நொறுக்கிவிடக்கூடியதாக வளர்ந்து வருகிறது.

அடுக்கடுக்காக இன்னலை ஏற்றுக்கொள்வது, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும், செம்மைப்படுத்தும் என்றால், மக்கள் தாங்கிக்கொள்ளத் தான் வேண்டும் என்று வற்புறுத்த ஒருவரும் தயக்கம் காட்டமாட்டார்கள்.

ஆனால், தொடர்ச்சியாக தொட்டதிலே தொண்ணூற்றெட்டு பட்டுப்போகிறது, கெட்டுப்போகிறது, நட்டத்தை மூட்டிவிடுகிறது என்றால், எப்படிப் பொது மக்கள் தாங்கிக்கொள்வார்கள்; ஏன் தாங்கிக்கொள்ள வேண்டும்?

பொதுமக்களின் தலைமீது இத்தனைப் பெரிய சுமையை ஏற்றிவைக்கிறோமே, அவர்கள் மகிழத்தக்க, ஆறுதல்பெறத்தக்க, நம்பிக்கைக்கொள்ளத்தக்க சூழ்நிலையையாவது அமைத்திருக்கிறோமா; சொல்லும் செயலும் பொருந்தியிருக்கிறதா! எதிர்பார்ப்பதற்கும் நடைபெறுவதற்கும் பொருத்தம் இருக்கிறதா என்பது பற்றிப் பொறுப்புணர்ச்சியுடன் ஆளவந்தார்கள் கவனிக்க வேண்டாமா? கவனித்தனரா? கவனித்திருந்தால், திட்டத்தின் பலன் எவரெவரிடம் சிக்கிவிட்டது என்பதே தெரியவில்லை என்று பெருந்தலைவர் பேசும் நிலை இருந்திடும்! வளர்ந்த செல்வம் எங்கே சென்று பதுங்கிக்கொண்டது, முடங்கிக்கொண்டது என்பதனைக் கண்டறிய ஒரு தனிக்குழுவை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்த பிறகா அமைக்க வேண்டிய, பரிதாபகரமான நிலைமை பிறந்திடும்!

தோல்வியும் நட்டமும் தலைகாட்டியபோதே, அவை குறித்து எடுத்துக்காட்டப்பட்ட காலத்திலேயே பொறுப்புணர்ச்சியுடன் கவனித்து, தக்க திருத்தங்களையும் முறைமாற்றங்களையும் செய்திருந்தால், இன்று படர்ந்துபோயுள்ள திகைப்பு நிலை ஏற்பட்டிருக்காது.

திட்டங்களைச் சரியாகத் தீட்டுங்கள் என்றும்,

தீட்டிய திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துங்கள் என்றும்,

கடன் கொடுக்கும் நாடுகளெல்லாம் இடித்துக் காட்டும் இழிநிலை ஏற்பட்டிருந்திருக்காது.

ஆனால் சந்தானம் எடுத்துக்காட்டியுள்ளதுபோல, ஆளவந்தார்கள் 'சூதாடி'க்கு ஒப்பான முறையிலேயே தோல்வி காணக் காண துணிவுடன் மேலும் மேலும் பெரிய பெரிய தொகையினைக் கொட்டிடலாயினர். இன்று?

நாம் செயல்படும் முறைபற்றி கண்டறிய வெளிநாட்டார் குழுக்களை அனுப்பி வைக்கிறார்கள்.

கடன் கொடுக்கத்தக்க நிலையினர், கடன்கொடுக்கத்தயக்கம் காட்டுகிறார்கள்.

ரூபாய் நாணயத்தின் மதிப்பையாவது குறைத்துப் பாருங்களேன் என்று யோசனை கூறுகிறார்கள்.

கொடுத்த கடனைத் திருப்பித் தந்திடும் நிலை இருக்கிறதா என்று கணக்குப் பார்க்கிறார்கள்.

உலகிலே உள்ள பல நாடுகளிலே நமக்காக 'உண்டி' குலுக்கிப் பணம் வசூலிக்கிறார்கள்.

பணம் வசூலிப்பதுடன் இல்லை! உணவுப் பொருள்கூட வசூலிக்கிறார்கள்.

இங்கு பட்டினிச் சாவு ஏற்படாமல் தடுக்க அமெரிக்க குடிஅரசுத் தலைவர் 'அபயம்' அளிக்கிறார்; போப்பாண்டவர் ஆசி அருளுகிறார்; ஐரோப்பிய நாட்டுப் பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் பணம் திரட்டி அனுப்புகிறார்கள்.

பதினைந்து ஆண்டுக் காலமாக நடைபெற்றுவரும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி முறைக்குப் பிறகு இந்தக் கதி! இந்த நிலை! காரணம்? சூதாடி மனப்பான்மை என்று கூறுகிறார், நேரு பண்டிதருடன் ஒன்

ருகச் சேர்த்து விலங்கிடப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட சந்தானம்.

இனியாகிலும் முறையான திருத்தங்களை மேற்கொள்ளாவிட்டால், பெரியதோர் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டுவிடும்; நாசம் விளைந்துவிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

எதிர்க் கட்சியினர் எடுத்துக் கூறும்போது ஆளவந்தார்களுக்கு ஆணவம் கொழுந்துவிட்டுக் கிளம்புகிறது.

நிபுணர்கள் எடுத்துக் கூறும்போது, இவர்களுக்கு என்ன தெரியும்—புத்தகப் பூச்சிகள்—என்று ஏளனப் பேச்சு கிளம்புகிறது.

சந்தானம் கூறும்போது கூடவா அதே மனப்போக்கு காட்டப் போகிருர்கள்?

அவருக்கு என்ன தெரியும் — படித்திருக்கிருர்—எதனையும் துருவித் துருவி ஆராய்பவர்—மனதிலே பட்டதை எடுத்துப் பேசுவார்—பொருளாதாரப் பிரச்சினைகளிலே தனிக் கவனம் செலுத்துவார்-அவ்வளவுதானே அவருக்குத் தெரியும் — அவரால் முடியும்—எமது பெருந்தலைவர் காமராஜர்போல இலட்சக் கணக்கிலே தேர்தல் நிதி திரட்டும் திறமை உண்டா? எங்கெங்கே புதுப் பணக்காரர்கள் இருக்கிருர்கள் தேர்தலுக்குப் பயன்படுத்த என்று மோப்பம் கண்டறியும் திறமை உண்டா? வழுக்கி விழக் கூடியவர்களைத் தமது முகாமுக்குள் இழுத்துப் போட்டுக்கொள்ளும் தனித்திறமை உண்டா? மின்னல் வேக, சூருவளி சுற்றுப் பயணம் செய்திடும் திறமை உண்டா? படித்தால் மட்டும் போதுமா? என்றெல்லாம் கேட்பார்களோ என்னவோ காங்கிரசில் வேலை பார்க்கும் ஆலவட்டங்கள்.

உரிய நேரத்தில், உரிய முறையில் அவர் கூற வேண்டியதைக் கூறிவிட்டார். ஆனல் ஆளவந்தார்களின் 'சூதாடி' மனப்போக்கு இதனுல் மாறும் என்று நாம் நம்பிட முடியவில்லை.

அவர்களை மாற்றக் கூடியது, ஓட்டுச் சீட்டு ஒன்றுதான். அதற்கான உரிமைபெற்றுள்ள பொது மக்கள் சந்தானம் போன்றவர்களும் காங்கிரஸ் ஆட்சியின் கேடுகளை எவ்வளவு வேகமாகக் கண்டிக்கின்றனர் என்பதனை உணர்ந்து, 'சூதாடி' மனப் போக்கினரை நாடாளும் நிலையினின்றும் விரட்ட வேண்டும். தவறிடின், தன் அகன்ற வாயைத் திறந்தபடி இருக்கும் படுபாதாளம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொருளாதார நிலைமையில் ஏற்பட இருக்கும் பயங்கரமான சரிவைத் தடுத்திட முடியாது.

அடுத்த வீட்டுக்காரி சிரித்தாளே.......!

அவர் அடித்தது பற்றிக் கவலைப்படவில்லை; ஆனல் அதைப் பார்த்து அடுத்த வீட்டுக்காரி சிரித்தாளே; அதை எண்ணிக் கொள்ளும் போதுதான் துக்கமும் வெட்கமும் பீறிட்டுக் கொண்டு வருகிறது.

இவ்விதம் கூறிக் குறைபட்டுக் கொண்டனளாம் ஒரு பத்தினி—கொண்டவன் கொடுத்ததை முதுகிலும் கன்னத்திலும் செம்மையாக வாங்கிக் கொண்ட நிலையில், கட்டினவன் தொட்டடிக்க வேண்டிய நிலை வந்ததே என்பதிலே வேதனை பிறக்கவில்லை.

அன்னமென்றும் சொர்ணம் என்றும் சொன்னவன், நாயே என்றும் பேயே என்றும் ஏசுகிருனே, ஏன் இந்தக் கேவலமான மாறுதல் என்பதிலே எண்ணம் செல்லவில்லை.

அவன் அடிக்கும்போது, அடுத்த வீட்டுக்காரி பார்த்துவிட்டாள்! 'களுக்'கெனச் சிரித்தும்விட்டாள். அவன் அடித்த அடியால் ஏற்பட்ட வலியைக்கூடத் தாங்கிக்கொள்ளலாம்; ஆனல் சிரித்தாளே அடுத்த வீட்டுக்காரி, அந்த ஏளனத்தை எப்படித் தாங்கிக் கொள்வது என்று கூறி வருத்தப்பட்டாளாம் ஒரு உத்தமி!

அந்தக் கதைபோல இருக்கிறது, இந்தியப் பேரரசின் அமைச்சர்களில் ஒருவரான பகத் என்பவரின் போக்கு!

பொருளாதாரத் துறை நிபுணர்களும், நிர்வாகத் துறை வித்தகர்களும் கூடிய ஓர் மாநாட்டில், உலக நாடுகளில் குறிப்பாக கிழக்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சிபற்றி ஓர் ஆய்வுரை நடைபெற்றபோது ஒரு நிபுணர்,

> இந்தியாவிலே கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, இன்று ஜப்பான் அடைந்துள்ள அளவு பொருளாதார வளத்தை இந்தியா பெற்றிட இன்னும் 137 ஆண்டுகள் பிடிக்கும் என்று கூறிவிட்டார்.

ஐயோ! அடுத்த வீட்டுக்காரி சிரிக்கிருளே என்று பகத் அலறுகிருர்; இது அடுக்குமா, ஆகுமா, இப்படியும் கேவலமாகப் பேசலாமா என்று கேட்கிருர், இதுமிகக் கேவலமான பேச்சு, உடனே திரும்பப் பெறுக என்று வலியுறுத்தி இருக்கிருர்; அந்த ஆய்வாளர்கள் வெளியிடும் ஏட்டில்,

> ஜப்பான் நிலையை இந்தியா அடைய 137 ஆண்டுகள் பிடிக்கும்

என்று உள்ள பகுதியை அகற்றிவிடச்சொல்லி சம்மதமும் பெற்றுக்கொண்டார்.

ஆகவே ஏட்டிலே அந்த வாசகம் இருக்காது; அடுத்த வீட்டுக்காரி சிரித்திடமாட்டாள்; விடமாட்டார் பகத்.

ஆனல் அந்த நிபுணர்கள் எடுத்துக்காட்டிய கணக்கு பொய் என்று மெய்ப்பிக்கப் பட்டுவிடுமா? எப்படி முடியும்! உள்ளதைத்தானே அந்த நிபுணர் கூறினர். உண்மை உள்ளத்தைத் தைக்கிறது; என்ன செய்வது.

100க்கு 2 என்ற அளவு வேகத்திலேகூட இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இல்லை. இதனை மறுத்துப் பேசிட விருப்பம் எழலாம், வீரம் பொங்கலாம், ஆனல் கணக்கு இருக்கிறதா? இல்லையே!!

> அவன் அடித்தது கண்டுதானே அவள் சிரித்தாள் — பக்கத்து வீட்டுக்காரி! ஐயோ! சிரிக்கிருளே என்று கூறி, அவள் வாயை மூடிவிடலாம், ஆனல் அவன் அடித்த அடி!

அதனால் வந்த வலி! அந்தத் தழும்புகள்!
மறைந்தா போகும்?

பயங்கரமான உலகப் போரிலே சிக்கி, இடிபாடுகளும் சுடுகாடுகளும் நிரம்பிய நிலையினவாகிப்போன நாடுகளெல்லாம் இந்தப் பதினெட்டு ஆண்டுகளிலே அடைந்துள்ள வளர்ச்சியுடன், அணுகுண்டு விழுந்து அழிவை உண்டாக்கிவிட்ட ஜப்பான் நாட்டின் வளர்ச்சி வேகத்துடன், 'சண்டையிலே பணம் சம்பாதித்த' நாடான இந்தியாவின் இந்தப் பதினெட்டு ஆண்டு வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்த்திடும் யார்தான் அந்த நிபுணர் கூறியதை மறுத்திட முடியும்.

ஜப்பானிடம் நாம்தானே இன்று கடன் கேட்கிறோம்; பெறுகிறோம்.

ஜப்பான், கொடுத்ததுபோதும்; மேலும் கொடுப்பதானால், நிலைமையைப் பார்த்தறிந்துதான் தரவேண்டும் என்றல்லவா கூறுகிறது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஜப்பான் போன்ற நாட்டு வளர்ச்சிக்கும் உள்ள ஏற்றத்தாழ்வினை மறைத்துவிட முடியுமா! மறைத்துவிடுவதாலே என்ன பயன்? பகத் வருத்தப்பட்டுக்கொள்வது, அந்த நாடுகளிலே ஏற்பட்டதுபோன்ற பொருளாதார வளர்ச்சி இங்கு ஏற்படவில்லையே என்பதுபற்றி அல்ல; அடுத்த வீட்டுக்காரி சிரித்தாளே!! என்பதிலேதான்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் வேகமும் அளவும் எதிர்பார்த்தபடியும் இல்லை; அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிககுப் பொருத்தமானதாகவும் அமையவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பே பண்டித ஜவஹர்லால் சொன்னார், இந்தியப் பொருளாதார இயந்திரம் தன்னைத்தானே இயக்கிக்கொள்ளும் ஆற்றல்பெற்றுக் கொண்டு வருகிறது. எப்படி விமானம் மேலே பாய்ந்து விண்வெளி செல்வதற்கு முன்னாலே, அதற்காகத் தன்னைத் தயார் படுத்திக்கொள்கிற முறையில் தரையில் வேகமாகப் பாய்ந்து செல்கிறதோ அதுபோன்ற நிலையில் நமது நாடடுப் பொருளாதார வளர்சசி இருக்கிறது என்று கூறினார், பெருமிதத்துடன்! நம்பிக்கையுடன்! இன்று? உணவு அமைச்சர் கடலை நோக்கியபடி நிற்கிறார், அமெரிக்கக் கபபல் வருகிறதா என்று. உலகின ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் நமது தலைவர்கள் பவனி வருகிறார்கள், கடன்—உதவி—கேட்டுப் பெற!

ஆனால் தேசியத் தன்மானத்தை இழக்கமாட்டார்கள்! உறுதி அளிக்கிறார்கள்!

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, உணவுக்கும் வேற்று நாட்டிடம் கை ஏந்தும் நிலை பிறந்துளது என்றால், தேசியத் தன்மானத்தைத் தனி முயற்சி செய்தா இழக்கவேண்டும். தன்னாலே அது பறிபோய் விடுகிறது!!

பகத் வருத்தப்பட்டுக்கொள்கிறார்! வருத்தப்படுகிறாரா? பயப்படுகிறாரா?

உண்மையைத் துருவிக் கண்டறியும்போது, வருத்தமல்ல, பயமதான் அவருக்கு என்பது புரிகிறது.

முகப்பில்:

அடுத்த கிழமை வரவிருக்கும் 'பாண்டியன் திருமேனி' கதையில் வரும் ஒரு சம்பவம்.

பொருளாதாரத்துறை நிபுணர், இந்தியாவின் நிலைமையை இவ்வளவு பச்சையாக—நூறு ஆண்டுகளுக்கும் மேல் பிடிக்கும் ஜப்பான் அளவு வளர்ச்சிபெற என்று கூறிவிட்டாரே, இங்கு உள்ள எதிர்க்கட்சிகள் இதுபோலக் கூறினால், தலையைத் தட்டி உட்கார வைத்துவிடலாம், ஏதுமறியாதார் எதையோ உளறுகிறார்கள், எம்மை நம்புங்கள், அவர்கள் பேச்சைத் தள்ளுங்கள் என்று பேசித் தப்பித்துக்கொள்ளலாம்; வெளிநாட்டு நிபுணர்கள் பேசும்போது, மக்கள் நம்பத்தானே செய்வார்கள், நம்பிடும் மக்கள் இவ்வளவுதானா உங்கள் ஆட்சியின் இலட்சணம் என்றல்லவா இடித்துரைப்பார்கள், பொதுத்தேர்தல் வேறு மிரட்டிக்கொண்டு வருகிறதே, என்ன செய்வார்களோ என்ற பீதி, அவருக்கு.

இந்தப் பொல்லாத நிபுணர்கள், இந்தச்சமயமாகப் பார்த்தா இவ்வளவு பச்சையாகப் பேசுவது! உண்மைதான்! அதனால் என்ன? அவ்வளவு உரதத குரலிலா பேசுவது! விவரமறியாதவர்கள் இந்த நிபுணர்கள்!! கருப்பைக் கருப்பு என்றுதானா சொல்லவேண்டும்! ஏன்! வெள்ளை அல்ல! என்றுசொல்லிவைக்கக்கூடாதா! ஜப்பான் அளவுக்கு வளர்ச்சிபெற நூற்றுக்கும் அதிகமான ஆண்டுகள் பிடிக்கும் என்றுதானா சொல்லவேண்டும்; விரைவாகவோ சற்றுத் தாமதமாகவோ, ஜப்பான் அளவுக்கு வளர்ச்சி அடைந்தே தீரும் என்று சொல்லக்கூடாதா! 137 ஆண்டுகள் பிடிக்கும் என்று கணக்கிட்டுச் சொல்வது. இதைக் கேட்கும் மக்கள் எப்படி நம்மை நம்பி மீண்டும் ஆட்சியை ஒப்படைக்கச் சம்மதிப்பார்கள்!!—என்றெல்லாம் எண்ணி எண்ணிக் குழம்பி இருப்பார்போல இருக்கிறது அந்த அமைச்சர்.

ஆனால் பகத்துக்கு பீதி எழத்தக்க பேச்சுப் பேசினாரே பொருளாதார நிபுணர், அவருககும் முன்னாலேயே எடுத்துக்காட்டிவிட்டுள்ளனர் ஆய்வாளர்கள், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் அளவும் வேகமும் மிகமிக மட்டம், மந்தம் என்பதாக.

> இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் வேகம், ஆசியாவிலேயே கடைசி வரிசையில் இருக்கிறது. இதிலே மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால், இந்தப் பொருளாதாரத் துறை வளர்ச்சியிலே காணப்படும் மந்தம் எல்லா முனைகளிலும் இருக்கிறது; விவசாயத் துறை, தொழில்துறை போன்ற எல்லா முனைகளிலும்.
>
> இந்தோனீஷியா நீங்கலாக மற்ற ஆசிய நாடுகள் அவ்வளவிலும் காணப்படாத மந்தம் இந்தியாவில் இருக்கிறது.
>
> வளர்ச்சி ஏணியின் கடைசிப் படிக்கட்டில் இந்தியா இருக்கிறது.

பொருளாதார நிபுணர்களின் ஆய்வுரைதான் இது. இதனை எப்படி மறுத்துப் பேசமுடியும்?

உண்மை நிலைமை என்பது சரி, ஆனால் இவ்வளவு பச்சையாகவா எடுத்துக்காட்டுவது எனறு கேட்டார் பகத்; அடுத்த வீட்டுககாரி சிரிததாளே எனறு பதறிய ஆரணங்குபோல! பாவம்!!

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.